
# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

ஆவணி/புரட்டாதி 99


## முருகப்பெருமான் மலர்





# குன்றின் உச்சியில் கும்பிட்ட நிலையில் ஆஞ்சநேயர்





மலை நாட்டில் ரம்பொடை நகரில்
ஐம்பூதங்களையும் ஏவல் கொள்ள வல்ல
அஞ்சனை புதல்வன்
அனுமானுக்குக் கற்கோயில் உருவாக வேண்டும் என்ற
சுவாமி சின்மயானந்தரின் உள்ளக் கனவு நனவாகிறது.
குன்றின் உச்சியில் கும்பிட்ட நிலையில்
ஆஞ்சநேயர் காட்சி தர
கீழே ஆஞ்சநேயருக்குப் பூஜை
நடைபெறுகிறது.



# SHRINE

# சந்நிதி

பல்சமய காலாண்டிதழ்

மலர் 2 இதழ் 7

ஆவணி/புரட்டாதி 99

ஆசிரியர்
வே.வரதசுந்தரம்





வெளியீட்டாளர்கள்
சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ்



39, 36வது ஒழுங்கை
கொழும்பு - 06
இலங்கை
தொலைபேசி: 596253


ஆன்மீக நெஞ்சங்களே!

## உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்

முறுவல் பூத்த முகத்துடன் தன் திருக்கரத்தைத் தூக்கி "யாமிருக்க பயமேன்" என்று பகவான் பாபா எமக்கு அபயம் அளிப்பதை முகப்பு அட்டையில் காண்கிறோம்.

இவ்விதழ் முருகப் பெருமான் மலராக விரிய இறையருள் கைகூடியுள்ளது. முருகன் அழகுத் தெய்வம். மகிழ்ச்சிப் பெட்டகம். வெற்றித் தெய்வம். அவன் குறிஞ்சி நிலத் தெய்வம் தமிழர் தம் தெய்வம்

நீலக் கடலில் செம்மை நிறச் சூரியன் உதிப்பது போன்று மயிலின் மீது உலகம் இன்புற தோன்றுபவன் முருகப் பெருமான்.

இவனது உலகளாவிய கருணையைக் கண்ட முருக பக்தர்கள் "உலகம் உவப்ப " "உலகம் உய்ய" முருகன் தோன்றியதாக நம்புகிறார்கள். அவனது மென்மைத் திருவடிக்குத் தனிச் சிறப்புண்டு. தன்னையடைந்த பக்தர்களின் பாவம் போக்கி அவர்களைக் காப்பது அவன் திருவடி.. முருகனின் திருவடிகளைத் திருமுருகாற்றுப்படை பாடுவதைப் பாருங்கள்.

"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்"

பக்தியும்,சேவையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.உலகம் உய்யத் தோன்றிய முருகனின் பக்தர்கள் மக்கள் உவப்ப,உய்ய வேண்டி மக்கள் சேவைக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இக்கருத்தினை பகவான் பாபா அழகாக கூறுவதைப் பாருங்கள்

மந்திரத்தை உச்சரிக்கும்
உதடுகளிலும் பார்க்க
மக்களுக்குச் சேவையாற்றும்
கரங்கள் புனிதமானவை.

நும்பணியில்
வே.வரதசுந்தரம்
ஆசிரியர்

# அனைவரும் வாழ்க!
# அனைத்துமே பெறுக!



சிவ.சுரானந்தேஸ்வர சர்மா
பிரதமகுரு ஆதீனகர்த்தா
வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தானம்
திருக்கோணமலை

ஈழமணித்திருநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்க அரும்பணியாற்றும் சந்நிதி சஞ்சிகை வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆலய வரலாறுகள், ஆன்மீகக் கருத்துக்கள், ஆன்றோர் பொன்மொழிகள் போன்றவற்றோடு அல்லாமல் பல்லின மக்களும் பயன்படத்தக்க வகையில் நல்லெண்ணக் கருத்துக்களை நயம்பட வழங்கி மானிட சமுதாய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பெரிதும் உறுதுணை புரியும் இச்சஞ்சிகை சிறந்ததொரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயப்பாடில்லை.

இம்மலரில் எமது வில்லூன்றிக் கந்தனின் தொன்மை வரலாறுகள் தலச் சிறப்புக்கள் அற்புதங்கள் உற்சவ தினங்கள் போன்ற விபரங்களை வெளியிட முன்வந்த அனைவருக்கும் எனது நன்றியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இக்காலாண்டிதழ் மாத இதழாக வளர்ச்சி அடைந்து வையமெல்லாம் பரந்து மணம் வீசுவதற்கு வேண்டுவார்க்கு வேண்டுவதை வழங்கும் வில்லூன்றிக் கந்தனை வேண்டிக்கொள்கிறேன்.

---

# வாழ்த்துரை

திரு.ஆ.ஆ.ஜெயரெட்ணம்
மணியகாரர்
பிரதி அத்தியட்சகர்
நகர அபிவிருத்தி அதிகார சபை

இன்றைய காலகட்டத்தில் சைவசமய கருத்துக்களுக்கும், ஆன்மீக முன்னேற்றத்திற்கும் இளைய சமுதாயத்தை ஆன்மீக வாழ்வுக்கு இட்டுச் செல்லவும் அரும் பணியாற்றி வரும் "சந்நிதி" என்னும் ஆன்மீக சஞ்சிகை வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடையும் நேரத்தில் அதன் சேவையையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

தங்கள் பணி சிறந்தோங்க வில்லூன்றிக் கந்தனைப்பிரார்த்தித்து நல் வாழ்த்து கூறுகின்றேன்.

# வள்ளி திருமணம்



மகரிஷி .சுவாமி. சிவானந்தர்

வள்ளி என்பது பரமாத்வாகிய பேரின்பமயமான தனக்குரிய வீட்டிலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாவைக் குறிக்கிறது. இவ்வாறு பிரிந்து வந்த ஜீவாத்மா அவித்தையின் காரணமாக இவ்வுலகமாகிய பாலைவனக் காட்டில் அலைகிறது. பாலைவனத்தில் அலைந்து திரியும் இந்த ஜீவாத்மாவை மீட்பதற்காக மகரிஷி நாரதரின் வடிவில் குரு அல்லது ஆசாரியன் தோன்றுகிறார். அவருடைய உதவியால் வள்ளிக்கும் கார்த்திகேயப் பெருமானுக்கும் திருமணம் நடைபெறுகிறது. அதாவது மேலான பரப்பிரம்மத்தோடு ஜீவாத்மா புனிதமடைந்த நிலையில் ஒன்றுபடுகிறது.

அந்த ஜீவாத்மா இறைவனிடத்திலேயே ஒரு சிறிதும் மாறாமலும், இம்மியளவும் குறையாமலும் பக்தி செலுத்தியதன் காரணமாக, வள்ளி சுப்பிரமணியக் கடவுளைத் தான் மணந்து கொள்வேன் என்ற உறுதியோடிருந்து, பலவிதமான இடையூறுகள் நேர்ந்த போதிலும் தன்னுடைய இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

எனவே வைராக்கியம், விவேகம் இரண்டையும் துணை கொண்டு இருந்தால் தான் ஜீவனாகிய வள்ளி தன்னுடைய பெற்றோர்கள், மற்ற இடையூறுகள் ஆகியவைகளான மாயையினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, முடிவில் பரம் பொருளும் பேரின்ப வீடுமாகிய சுப்பிரமணியக் கடவுளுடன் ஒன்றாக இணைய முடிந்தது.

சுப்பிரமணியர் அல்லது சண்முகக் கடவுளின் திருஉருவத்தைப் பற்றிப் பல்வேறு தத்துவங்களும், கொள்கைகளும் வழங்கி வருகின்றன. சிலர் அவரைத் தேவர்களின் சேனைக்குத் தலைமைத் தளபதி என்று கருதுகிறார்கள். வேறு சிலர் அவர் தேவர்களுக்குத் துணை புரிய வந்தவர், அவர் மனிதர்களை விட உயர்ந்தவராக இருந்தாலும், தேவர்களுக்குச் சமமானவர் கூட அல்ல என்று கருதுகிறார்கள்.

சுப்பிரமணியம் என்ற பெயரே நமக்கு அவருடைய உண்மையான தத்துவத்தை விளக்குகிறது. சுப்பிரமணியம் என்றால் பிரம்மத்தை நன்கு உணர்ந்தவர் என்று பொருள்படும். பிரம்மத்தால் தான் பிரம்மத்தை நன்கு அறிய முடியும். எனவே சுப்பிரமணியக் கடவுள் பிரம்மத்தைத் தவிர வேறு எவருமில்லை.

சுப்பிரமணியரின் பிறப்பைப் பற்றிய நிகழ்ச்சியும் தத்துவமும் மிகவும் சுவையான ஒன்று. சிவபெருமானுக்கு ஆறு முகங்கள் இருந்தன. அவற்றுள் நான்கு முகங்கள் நான்கு திசைகளை நோக்கியும் ஒன்று மேல் நோக்கியும் மற்றோன்று கீழ் நோக்கியும் இருந்தன. இந்த ஆறுமுக்ங்களிலிருந்து நெற்றிக்கண் மூன்றாவது கண்ணிலிருந்து தேஜஸ் அல்லது தெய்வீகவொளி வெளிப்பட்டது. இந்தப்பேரொளி எங்கெங்கும் நிறைந்தும் விண்வெளி முழுவதும் நிறைந்துகாணப்பட்டது. சிவபெருமான் இந்தப் பேரொளி முழுவதையும் தம்கைகளில் வாங்கிக் கொண்டு அதை வாயுதேவனிடம் கொடுத்தார். சிறிது நேரத்திற்கு மேல் அந்த வெப்பத்தைப் பொறுக்க முடியாத வாயுதேவன் அதை அக்கினி தேவனிடம் கொடுத்தார். அக்கினிதேவன் அந்தப்பேரொளியை கங்கை நதியில் விட கங்கை நதியானவள் அதை சரவணப்பொய்கையில்

சேர்ப்பித்தாள். அங்கு அது ஆறு குழந்தைகளின் வடிவங்களைப் பெற்று மிதந்து கொண்டிருந்தன. பார்வதிதேவி அவற்றை ஒன்றாகச் சேர்த்து அனைத்துக் கொண்டபோது அது ஒரு உடலும் ஆறுதலைகளும் கொண்ட அவதார புருஷனாக மாறி ஷண்முகன் எனப் பெயர் கொண்டு இப்புவியில் தன் திருவிளையாடலைத் தொடங்கியது.

பிரம்மத்தின் கதையும் அதுவே படைப்பின் கதையும் அதுவே. பிரம்மம் எங்கும் நிறைந்துள்ளது. பிரம்மம் பேரொளியின் வடிவில் இருந்தது. விண்வெளி முழுதும் பரந்திருந்தது. பின்னர் அது காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகியவற்றிலும் பரவியது.எனவே சுப்பிரமணியக் கடவுளின் பிறப்பின் தத்துவத்திலிருந்து அவர் பரப்பிரம்மத்தைத் தவிர வேறு எவருமில்லை என்பது தெளிவாகப் புரிகிறது.

முருகப் பெருமானுக்கு ஆறுதலைகள் இருப்பதால் ஷண்முகன் எனப்பெயர் பெற்றார். முகத்தில் அதாவது தலையில் ஐந்து ஞானேந்திரியங்கள் இருக்கின்றன. இந்த ஐந்து ஞானேந்திரியங்களோடு சேர்ந்து ஆறாவது இந்திரியமாகிய புத்தியுடன் ஆறு வாயில்களின் வழியே தான் அந்தராத்மா வெளியிலுள்ள பொருள்களைப் பற்றி அறிகின்றது. அந்த ஆறு துவாரங்களின் வழியாகத்தான் அந்தராத்மாவின் ஒளி வெளிப்படுகிறது. இந்த ஆறுதுவாரங்கள் வழியே உணர்வு வெளிப்படுவதிலிருந்தே அறிவாளிகள் நமக்குள்ளே இருக்கும் ஆன்மாதான் இந்த உணர்வு என்று அறிந்திருக்கின்றார்கள். இந்த உள்ளுணர்வுக்கு ஆறு முகங்கள் இருக்கின்றன. அவர் தான் சுப்பிரமணியக் கடவுளுக்கும் ஆறுமுகங்கள் இருக்கின்றன. அவர் தான் ஆறுஞானேந்திரியங்களாகிய ஆறு தவைகளையுடைய மேலான பரபிரம்மம்

சுப்பிரமணியக் கடவுளின் ஆறுமுகங்களும் நமக்குள்ளேயுள்ள ஆறு மூலாதார மையங்கள் அல்லது சக்கரங்களைக் குறிக்கின்றன. என்று யோகிகள் சொல்லுகின்றார்கள் ஒவ்வொரு தலையும் ஒவ்வொரு சக்கரத்துக்குரிய தேவதையின் உருவம் இதிலிருந்து சுப்பிரமணியக் கடவுள் சாதாரன தெய்வம் மட்டுமல்லாது பரப்பிரம்மமே ஆகிறார் என்றும் தெரிகிறது.


சுப்பிரமணியத்தைத் தியானம் செய்வது பிரம்மத்தின் உண்மையான நிலையைப்பற்றிய ஞானத்தைப் பெறுதற்குரிய உறுதியான வழியாகும் என்று பக்தர்கள் கருதுகிறார்கள். சுப்பிரமணியக கடவுள் ஞானமே உருவானவர். எனவே அவரைத் தியானம் செய்வதால் ஞானம் பெறுவது உறுதி.

இதைத் தவிர ஒருசாதகனுக்கு தொடக்கத்தில் சுப்பிரமணியருடைய உருவத்தை எடுத்துச் சொல்லி அவருடைய ஆறுமுகங்களுடைய உருவம் மயில் வாகனத்தில் அமர்ந்து கையில் வேலுடன் இருபுறமும் வள்ளி தேவயானையுடன் உள்ளபடி தியானிக்கச் சொன்னால் அவன் எவ்வித சிரமமும் இன்றி மூன்றுமணி நேரம் அதிலேயே லயித்து தியானத்தில்மார்ந்து விடுவான். மனத்தை ஒருமுகத்திலிருந்து மற்றொரு முகத்துக்கு பதினெட்டு கண்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கும் பன்னிரு கரங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கும் மாற்றி மாற்றி ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருப்பதால் மனம் வேறெங்கும் வெளியில் அலைந்து திரிய முடியாது. ஒரு சாதகன் இப்பயிற்சியில் முன்னேற்றம் அடைந்தவுடன் இந்த மாதிரி செய்வதை விட்டு வேலின் மீது மட்டும் தியானத்தில் ஈடுபட்டால் போதும் வேல் தான் சுப்பிரமணியரின் உண்மையான உருவம். அது ஞானத்தைக் குறிக்கிறது. மற்றெல்லாம் மறைந்த பிறகு இந்த ஞானத்தின் சின்னம் மட்டும் நிலைத்து நிற்கிறது.

ஆழ்ந்த சிந்தனையும் உயர்ந்த எண்ணங்களும் பரந்த நோக்கும் அறிவுக் கூர்மையும் தான் புத்தியின் சிறப்பான இயல்புகள். இவை அனைத்தும் வேலின் அமைப்பு அல்லது உருவத்தால் குறிக்கப்படுகின்றன. அது உயரமாயிருக்கிறது. அது ஆழமாக நீண்ட காம்புடனிருக்கிறது. வேலின் இலை அகன்று இருக்கின்றது. எனவே இது ஞானம் அல்லது அறிவின் சின்னமாக இருக்கிறது எனவே முன்னேற்றமடைந்த சாதகன் வேலையே தியானம் செய்கின்றான். இதைத் தியானம் செய்யும் ஒருவன் சச்சிதானந்தமாகிய பரப்பிரம்மத்தை உறுதியாக அடைகிறான்.

சுப்பிரமணியக் கடவுளின் ஆசிகளை நீங்கள் அனைவரும் பெறுவீர்களாக.

# ஒன்றாய்ச் சிரித்து வாழும் குடும்பத்தினர் சேர்ந்து வாழ்வார்கள்



சேர்ந்து பிரார்த்தனை செய்யும் குடும்பத்தினர் சேர்ந்து வாழ்வார்கள்-மதவாதிகள் இப்படி நீண்ட நாட்களாய்ப் போதித்து வருகிறார்கள். இதுநிரூபிக்கப்பட்ட உண்மை. இதை நாம் விளக்கத் தேவையில்லை

வரலாற்றின் இன்றைய கால கட்டத்திலே சமீப ஸ்திரத் தன்மையின் ஆதாரமான குடும்ப ஒற்றுமை சிதறிக் கொண்டிருக்கின்றது. குடும்ப ஒற்றுமையைக் கட்டிக்காக்க நாம் எல்லா உபாயங்களையும் நாட வேண்டும்.

உறுதியான பாதுகாப்பான சமூக அங்கமான குடும்பம் ஏன் உடைகிறது. இவ்வளவு புரையோடிய பிரச்சினையில் நான் சொல்லும் இரண்டு யோசனைகள் விளையாட்டுப் போல தோன்றினாலும் அவை உண்மையில் சீரிய யோசனைகளே நீங்கள் அவற்றை மதிப்பிடுங்கள்.

சேர்ந்து சிரிக்கும் குடும்பத்தினர் சேர்ந்தே வாழ்வார்கள்

நல்ல நகைச்சுவை உணர்வு குடும்ப ஒற்றுமையைக் குலைக்கும் உராய்வுகளை தவிர்க்கும். ஒன்று போல இயங்கும் விதியை நாம் ஏற்க வேண்டும். பாசம் மிக்க நகைச்சுவைக்கு எதிராக நீங்கள் சினம் கொள்வதோ எரிச்சல் மூட்டுவதோ பொறுமை இழப்பதோ விரும்பத்தகாத விதத்தில் நடப்பதோ முடியாது.

நமது ஆளுமையின் சுபாவமாக நகைச்சுவை உணர்வை போற்றி வர வேண்டும். குடும்பத்தினர் மத்தியில் சிரிப்புடன் அதை அடிக்கடி வெளிப்படுத்த வேண்டும். குடும்பத்தில் ஒவ்வொரு நபரிடமும் நகைச்சுவை உணர்வை, சிரிக்கும் மனப்பாங்கை உற்சாகமூட்டி வளர்க்க வேண்டும். அப்பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நகைச்சுவையும் சிரிப்பும் தொற்றிக் கொள்பவை.

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கைக்கு விமர்சனமும் பிடுங்குதலும் உதவாது. பொறுமையைச் சோதிக்கும் விவாதங்களும் சரிப்பட்டு வராது. ஆனால் ஒரு குடும்பத்திற்குள் இத்தகைய போக்குகள் அடிக்கடி தலைதூக்குகின்றன.

குடும்ப வாழ்க்கையில் பாசம் மிக்க நகைச்சுவை உணர்வும், மகிழ்ச்சி கலந்த சிரிப்பும் நிரம்பி வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

சேர்ந்து விளையாடும் குடும்பத்தினர் சேர்ந்தே வாழ்வார்கள்.

ஒரு குடும்ப அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். அந்த நேசத்தை வெளிக்காட்ட வேண்டும். ஒருவரை ஒருவர் விரும்பவும் வேண்டும். ஒருவரோடு ஒருவர் கூடி இருப்பதை விரும்ப வேண்டும். சேர்ந்து இருப்பதை பெரிதும் விரும்ப வேண்டும். வெளி மனிதர்களிடம் சௌஜன்யமாய் பழகுவதைப் போலவே குடும்ப அங்கத்தினரிடமும் ஒருவரோடு ஒருவர் சௌஜன்யமாய் பழக வேண்டும். ஆனால் அது இப்படி நடப்பதில்லை குடும்ப அங்கத்தினர்களை அலட்சியப்படுத்துகிறோம். வெளி மனிதர்களிடம் விரும்பத்தக்க வகையில் நடந்து கொள்கிறோம்.

அப்பா ரோட்டரிக் கிளப்பில் இனிய முகத்துடன் மிருதுவாய் பழகுவதைப் போலவே வீட்டிலும் பழகுவாரானால் மாதர் சங்கத்தில் கலகலப்பூட்டுவதைப் போலவே அம்மா வீட்டிலும் விளங்கினால்!

வீடு என்பது நீங்கள் இஷ்டம் போல வளையம் வரும் இடம் மட்டுமன்று. உங்கள் கவலையை மறக்க வேண்டிய இடம். மகிழ்ச்சியாய் இருக்க வேண்டிய இடம். குடும்பத்தினர் சேர்ந்து மகிழ வேண்டும்.

**Dr.எம்ஆர்காங்மேயர்**
நன்றி
இதோ உதவி

## வாழ்த்துரை

ந.செல்வஜோதி
செயலாளர்
ஸ்ரீமுருகன் தொண்டர் சபை
வில்லூன்றி கந்தசுவாமி கோயில்
திருகோணமலை

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை ஓர் அருள்சுரக்கும் புண்ணிய பூமி. குரை கடல் ஓத நித்திலம் கொழிக்கும் இத்திருத்தலத்தில் வில்லூன்றி என்னும் புனிதபதியில் திருவேரகத்தில் உருவாகி தானே விரும்பி வந்து அமர்ந்து அருள் பாலிக்கும் வள்ளி தேவசேனா சமேதசண்முகப் பெருமான் வீற்றிருக்கின்றார்.

கடந்த இருபத்தி நாலு வருடங்களின் பின் சிறந்த சிற்பாசிரியர்களால் புனரமைக்கப்பட்டு பரிவார மூர்த்திகளுக்கு புதிய ஆலயங்கள் கட்டப்பட்டு திருப்பணி வேலைகள் நிறை வெய்தி இலங்கையின் தலை சிறந்த வேத விற்பன்னர்களினால் கும்பாபிஷேகம் 1994ம் ஆண்டு நிறைவு பெற்று அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் கொடியேற்ற மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

சைவமும் தமிழும் தழைத்தோங்குவதற்காக சிறந்த ஆன்மீக சஞ்சிகை ஆனது எமது திருகோணமலை வில்லூன்றிக் கந்த சுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றை வெளியிடுவதை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றோம். தங்கள் பணி தொடரவும் சந்நிதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவரவும் இளம் சமுதாயத்தின் ஆன்மீக சிந்தனையை துாண்டவும் சிறப்பாக பணியாற்ற வேண்டும் எனவும் எல்லாம் வல்ல ஆறுமுகப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து வேண்டுகின்றோம்.

## வாழ்த்துரை

திரு.ஞா.கதிர்காமதாசன்
நிர்வாகஸ்தர்
வில்லூன்றி கந்தசுவாமி தேவஸ்தானம்
திருகோணமலை

வில்லூன்றியம்பதியில் வீற்றிருக்கின்ற முருகப்பெருமான் பக்தர்களுக்கு பலவிதமாய் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். வில்லூன்றிக்கந்தன் பல நூற்றாண்டு தலவரலாறு உடையவர். இப்பதியில் திருவிழா வருடந்தோறும் பல்லாண்டு காலமாய் நடைபெறுகின்றது. இத் தேவஸ்தானத்தில் திரு.சிவ.சுரானேந்தேஸ்வர சர்மா ஆதீன குருவாக இருக்கிறார். அவர் ஒவ்வொரு வருடமும் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற எல்லா உதவியும் செய்கிறார். தேவஸ்தானத்தை சிறப்பாக பரிபாலிக்கின்றார். வில்லூன்றி தேவஸ்தானத்திற்கு வருடந்தோறும் பக்தர்கள் பெருகிவரவேண்டும். வில்லூன்றி கந்தனின் அருள்கடாட்சத்தை எல்லாரும் பெற்று பயன் பெறவேண்டும்.

# செவ்வேள் திருக்கைவேல்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன். அந்த செவ்வேள் முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் கருணைக்கடல். முருகன் என்றால் இளமையை உடையவன், அழகுடையவன், மணம் உடையவன், தெய்வத் தன்மை உடையவன் என நான்கு விதமாகப் பொருள் கொள்ளலாம். நம்முடைய அழகு, இளமை முதலியன என்றும் நிலைபெற்று நிற்பவை அல்ல, அவை அழியுந் தன்மை வாய்ந்தவை. ஆனால் முருகனது அழகு இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பன.

முருகப் பெருமானை எண்ணுந்தோறும் அவரது சிறப்புப் பொருந்திய படையாகிய வேலாயுதமே நமக்கு நினைவுக்கு வருகிறது. முருகன் திருக்கரத்தில் உள்ள வேல் ஞான சக்தி ஆகும். அந்த வேற்படையானது அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தை அருளும் தன்மையுடையது. ஆகவே அதனை "ஞான Cty;"; என்று ஆன்றோர் சிறப்பித்துக் கூறுவர்.

முருகன் ஒரு பெருவீரன் மட்டுமல்ல, ஞானந்தான் உருவாகிய நாயகன் என்று கந்தபுராணம் கூறுகிறது. முருகனைக் "கதிர் வேலவன்" என்று பக்தர்கள் போற்றிப் புகழ்கின்றனர். பகலவனைக் கண்டதும் உலகைச் சூழ்ந்திருந்த இருள் விலகுகிறது. அது போல ஆறுமுகனைக் கண்டதும் அகவிருள் நீங்குகிறது. சூரியன் சுயப் பிரகாசமுடையவன். எனவே, அவன் கதிர் ஒளியைப் பரப்புகிறான். அந்த ஒளியில் இருள் தானாகவே விலகிவிடுகிறது. அதே போன்று ஞானச் சுடராக, ஞான சக்தியாக விளங்கும் வெற்றி வேலின் ஒளியிலே அகவிருள் நீங்குகின்றது. அத்துடன் கேடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கும் அஞ்ஞானமும் அகன்று விடுகின்றது. செவ்வேளின் திருக்கரத்தில் உள்ள வேலின் சிறப்பை கூற வந்த நக்கீரர்,

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்-வாரி
குளித்த வேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை"

என்று போற்றிப் புகழ்கின்றார். அத்துடன் நின்று விடாமல் குமரப் பெருமான் தன்னைக் குகையிலிருந்து காப்பாற்றிய பெருங்கருணையை



சிவநெறிச்செம்மல்
வை. அநவரத விநாயகமூர்த்தி

'குன்றம் எறிந்ததுவும் குன்றப் போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய் விடா வீரன்கை வேல்"

என்று வியந்து போற்றுகிறார். செவ்வேளின் திருக்கரத்தில் காணப்படும் வேலின் சிறப்பை நோக்கி அதனை வடிவேல், கூர்வேல், சக்திவேல், சீர்வேல், வெற்றிவேல், வீரவேல் எனப் பலவாறு முருகன் அடியார்கள் போற்றித்துதிப்பார்கள். முருகப்பெருமான் வேல் தாங்கிக்குருவாய் வருகின்ற கோலத்தைக் கந்தரனுபூதியில்

"முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள் கொண்டறியா ரறியுந்தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன்றென நின் றதுவே".

என்று அருணகிரிநாதர் அழகாக எடுத்துக் கூறுகின்றார். மேலும் அவர் தமது கந்தரலங்காரத்தில் "தனிவழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" என்றுநாம் செல்லும் தனிவழிக்கு முருகப்பெருமானுடைய ஒளிபொருந்திய வேலும் மயிலும் துணையாக வரும் தன்மையை நன்கு விளக்குகிறார். முருகன் அடியார்கள் பலர் வேல் வழிபாட்டின் சிறப்பு நோக்கி வேலை மாத்திரம் வைத்துப் பூசித்து வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் வேல் வடிவில் ஆறுமுகப்பெருமான் காட்சி தருகிறார். செவ்வேள் திருக்கை வேலை அன்புடன் பூசித்து வருவோருக்கு கலியுக வரதனான முருகப் பெருமானின் சிந்தனை இடையறாது ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. அந்த அடியார்களுக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவதும் அப்பெருமானின் வடிவேல் ஆகும். இதனையே அருணகிரிநாதரும் ஆறுமுகன் வேலும் திருகக்கையுமுண்டே நமக்கொரு மெய்த்துணையே என்று அறிவுறுத்துகிறார்.

முருகப்பெருமானது திருவருள் கைவரப் பெற்றவர்களுக்கு வாழ்வில் குறையேதும் இல்லை. சகல செல்வங்களும் பெருகும். எனவே நாமெல்லோரும் செவ்வேளின் திருக்கரத்தில் விளங்கும் வேலைப்போற்றித் துதிப்போமாக.

"ஆறிரு தடந் தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்;"




நல்லூரரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனெடி

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமடி

- சிவயோக சுவாமிகள் -

ஸ்ரீ தாமோதரவிலாஸ்

சைவ உணவகம்

239, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்



அகத்திய முனிவர் பூசித்த பிள்ளையார்.

திருக்கோணமலை வில்லூன்றியில்

கறுத்தப் பிள்ளையார் என்ற நாமத்தோடு

அருள்புரிகின்றார்.

# இக்கற்றோர் துயர் போக்கும் வில்லூன்றி கந்தன்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சரித்திரப் புகழ்வாய்ந்த புராதன இந்து ஆலயங்களின் சரித்திரங்களை ஆராயுமிடத்து, அத்தனையும் திருக்கோணேஸ்வரப் பெருமானுடைய ஆலயத்தோடு நெருங்கிய தொடர்புள்ளவைகளாகவேயுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற அழகிய இயற்கைத் துறைமுகத்தினைக் கொண்ட திருக்கோணமலை நகரில் ஆழம் காண முடியாத ஆழ்கடலுக்கருகாமையில், வில்லூன்றியம் பதியில் கோயில் கொண்டிருக்கும் வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானின் ஆலய வரலாறு சுவையானது மட்டுமல்ல, இன்றும் அதனை ஆராயப்புகும் பலருக்கும் புதிராகவேயுள்ளது.

திருகரைசையம்பதியில் அகத்திய முனிவரால்
ஸ்தாபிக்கப்பட்ட கறுத்தப் பிள்ளையார்
திருக்கோணமலைக்கு எழுந்தருளியமை

சிவபெருமானின் திருமணக் கோலம் காண திருக்கைலை சென்ற அகஸ்திய முனிவரின் வருகையால் வடகைலை தாழ்ந்து தென்கைலை உயர்ந்தது. இக்காரணத்தால் பூமியை சமநிலைப்படுத்தும் நோக்குடன் அகத்திய முனிவரை தென்கைலை செல்லுமாறும், அங்கு பார்வதி சமேதராக தனது திருமணக் கோலத்தைக் காட்டியருளுவோம் என்று சிவபெருமான் பணிக்க, அத்திருவாக்கினை ஏற்று தஷணகைலையினை அடைந்த அகத்திய முனிவரிடம் திருக்கோணேஸ்வரப் பெருமான், அசரீரி வாக்காக, திருக்கரைசை மாநகர் சென்று மகாவலிகங்கைக் கரையிலே சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யுமாறு பணித்தார். திருக்கரைசைப் புராணத்திலுள்ள கூற்றுப்படி சிவலிங்கப் பிரதிஷ்டை செய்த அகத்திய முனிவர்:-



"திவ்விய மாமணிச் சருவ தீர்த்தமுடையவர் என்றே
அவ்விறைக்குத் திருநாமம் அருளிச் செய்த தலத்தில்
பவ்விய பேரருட்போக சக்தியையும் தாபித்துக்
கவ்வையறு நவதீர்த்தக் கணபதி யுந் தாபித்தான்"

நாகராசா
கணபதிப்பிள்ளை

திருக்கரைசையில் சிவலிங்கத்தினையும் உமையவளையும் பிரதிஷ்டை செய்த அகத்தியர் துன்பமற்ற நவதீர்த்த விநாயகரையும் ஸ்தாபித்தார்.

இயற்கையழிவுகளினால் மூதுார் பகுதியிலுள்ள பல புராதன ஆலயங்கள் அழிந்தன. இவற்றுள் திருக்கரைசை மாநகரிலுள்ள அகத்திய முனிவர் ஸ்தாபித்த சிவாலயமும் ஒன்றாகும். பன்னெடுங்காலங்களுக்குப் பிற்பாடு காடுகளால் சூழப்பட்டுக் கிடந்த இவ்வாலயத்திற்குரிய பல விக்கிரகங்களும் மற்றும் பல பொருட்களும் காடுகளை வெட்டி பயிர் செய்வோர்களினால் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இக்காலத்தில் தென் இந்தியாவிலிருந்து வந்து திருக்கோணமலை வில்லூன்றிப் பகுதியில் நிலம் வாங்கி குடியமர்ந்த பிரம்ம ஸ்ரீ வைரவநாதக் குருக்கள், மூதுார் பகுதி சென்று மகாவலி கங்கைக் கரையிலே கமம் செய்து வந்த காலத்தில், அகத்தியரால் ஸ்தாபிதம் செய்து பூசிக்கப்பட்டு காலத்தினால் அழியப்பட்டு பூசைகளற்று கவனிப்பாரற்றுக் கிடந்த அகத்திய ஸ்தாபன ஆலயத்திலிருந்து பெறப்பட்ட நவதீர்த்த விநாயகப் பெருமானின் விக்கிரகத்தினை தாம் வயல் செய்து கொண்டிருந்த இடத்தில் ஒரு சிறு கொட்டில் கட்டி பூசை செய்து வந்தார். காலக்கிரமத்தில் விநாயகரின் விக்கிரகத்தினை, தான் நிரந்தரமாக வதிகின்ற திருகோணமலை பட்டினத்திலுள்ள வில்லூன்றிக்கு கொண்டு வந்து தனது நிலத்திலேயே சிறியதொரு ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தார்.

அழகிய விக்கிரகமான இப்பிள்ளையாரின் உருவம் பார்ப்பவர்களுக்கு பல பல நிறங்களில் தோற்றமளித்ததாம். இவ்விக்கிரகம் முழுமையான பள பளக்கும் கறுப்பு நிறத் தோற்ற முடையதால் எல்லோரும் எம்பெருமானை கறுத்தப் பிள்ளையார் என்றே அழைத்து பக்தி சிரத்தையுடன் வழிபட்டனர். வில்லூன்றிப் பதிக்கு தம்பி முருகன் வருவதற்கு முன்பதாகவே மூத்தவரான கணபதி வருகை தந்து மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தார்.

அகத்தியப் பெருமானால் திருக்கரைசையில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பிள்ளையார், தற்போது திருக்கோணமலை வில்லூன்றிப் பதியிலே அமைக்கப்பட்ட ஆலயத்தில்; மூலவராக இருந்து நினைத்த காரியத்தினை அனுகூலமாக்கி அருள் பாலிக்கும் தனது தம்பி முருகப் பெருமானுக்கு உறு துணையாக நின்று உதவி புரிகின்றார். கருணையுள்ள அபிஷேகப் பிரியரான கறுத்த பிள்ளையார்.

வில்லூன்றியினை ஆட்கொண்டு திக்கற்றோரின் துயர் போக்கிக் கொண்டிருக்கும் வள்ளி தெய்வயானை சமேதஆறுமுகப் பெருமான்

மனையாவெளி முடமாண்டான் கடற்கரையிலிருந்து பெறப்பட்ட வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகப் பெருமானின் தாமிர விக்கிரகங்களின் கதைகள் பல பல ரூபங்களைப் பெற்று வெளி வந்து கொண்டிருக்கின்றது. இதனைப் பற்றி பூரணமான ஆதாரமான எந்தவொரு ஏட்டையோ நூலையோ பெற முடியாதிருப்பது ஆராய்ச்சியாளர்களுக்குரிய பெரியதொரு குறைபாடாகும். இது வரை வெளியிடப்பட்ட ஆலய கும்பாபிஷேக மலர்களிலோ, மற்றும் நூல்களிலோ குறிப்பாக, 1994ல் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரிலும் கூட இவ்விக்கிரகங்கள் கிடைத்த வரலாறுகள் முரண்பட்ட கருத்துக்களையே கொண்டிருக்கிறது. வில்லூன்றி ஆலயத்தின் சரித்திரம் மட்டுமல்லாது மற்றும் எத்தனையோ சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களினது சரித்திரங்களும் கர்ண பரம்பரைக் கதைகளினுாடாகவே பெற வேண்டியுள்ளது. இறைவன் பால் பூரண அன்பு கொண்ட பக்தர்களுக்கு இது ஒரு குறைபாடாகவே தோன்றாது. அன்னாருக்கு வேண்டியதெல்லாம் அவன் கருணையும் அருளுமே.

பாய்க்கப்பலிலிருந்து கடலினுள் இறக்கப்பட்ட முருகப் பெருமானின் விக்கிரகங்களைக் கொண்ட பேழை

இவ்விக்கிரகங்களைப் பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதையின் சாரம்:-

பறங்கிப் பேட்டையிலிருந்து வந்த பாய்க் கப்பல் ஒன்றில் வள்ளி தெய்வானையுடன் கூடிய முருகப் பெருமானின் தாமிர விக்கிரகங்கள் மூன்று ஒரு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்தது. திருக்கோணமலையில் கோணேசர் மலைக்கும் அரிமலைக்குமிடையில் கப்பல் காற்றின்மையால் ஒரு வார காலம் ஓட முடியாமல் நின்று விட்டது.




தன் கடமைகளைத் தவறாமல் ஒழுங்காகச் செயதுகொண்டு தன்னால் ஆனவரை வாழ்க்கையில் முயன்று கொண்டிருப்பவன் கட்டாயம் ஒளியைக் காண்பான். மேலும் மேலும் உயர்ந்த கடமைகள் அவனது பங்காக அவனைத் தேடித் தாமாக வந்துசேரும்.

- சுவாமி விவேகானந்தர் -

கப்பல் தாமதமாவதனை நினைத்து கவலைப் பட்டுக் கொண்டிருந்த தலைவனின் கனவில் பெருமான் தோன்றி, விக்கிரகங்கள் உள்ள பெட்டியினை கடலில் இறக்கி விட்டால் கப்பல் ஓடும் எனக் கூறவே, தலைவனும் பெட்டியினை கடலில் இறக்கி விடவே கப்பலும் ஓடத் தொடங்கியது. இறக்கப்பட்ட பேழையானது கடலில் மிதந்து வருவதனை கந்தசுவாமி மலைச்சாரலில் முடமாண்டான் என அழைக்கப்படும் கடற்கரை ஓரமாக நின்ற கரையூரவர் மூவர் கண்ணுற்று அதனைக் கரையேற்றி, மற்றுமுள்ள பெரியவர்களுக்கும் அறிவித்து அப்பேழையினை திறந்து பார்த்த போது, பெருமானின் விக்கிரகங்களைக் கண்டு ஆச்சரியமுற்றனர். இப்பெரியவர்கள் எல்லோரும் கூடி கந்தசாமி மலைச்சாரலில் முடமாண்டான் கடற்கரைப் பகுதிக் கருகாமையிலேயே சிறியதொரு ஆலயம் அமைத்து வழிபடலானார்கள்.

மற்றுமொரு கதையின் மூலம் விக்கிரகங்களையுடைய பெட்டியை ஏற்றி வந்த கப்பல்காரர்கள், கப்பல் காற்றில்லாமல் ஓட முடியாது அரிமலைக்கருகே நின்ற பொழுது, வியாபார நிமித்தமாக வடகரை சென்று திரும்பிய வேறொரு படகிலுள்ளவர்களிடம் பெட்டி கையளிக்கப்பட்டதாகவும் அவர்கள் மூலமே இப்பெட்டி கரை சேர்ந்ததாகவும் அறிய முடிகின்றது என கூறப்பட்டுள்ளது.

# சந்நிதி சோதிடம்



அன்புக்குரிய வாசகர்களே!

ஒன்பதாண்டு காலம் ரிஷி கேசத்தில் வாழ்ந்து யோக வாழ்க்கையில் ஈடுபட்ட வரும், ''விக்னேஸ்;'' என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ள சோதிட ஆய்வாளரும; ''வான்மதி'' சோதிட சஞ்சிகை ஆசிரியருமான திரு விக்னேஸ்வரன் அவர்கள்சந்நிதி வாசகர்களின் சோதிடம் தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது பிரச்சனைகளுக்கு விளக்கம் அளிக்க முன் வந்துள்ளார்.

சந்நிதி அன்னாருக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

வாசகர்கள் தமது பிரச்சினையைச் சுருக்கமாக ஒரு தாளில் தெளிவாக எழுதி, பின்வரும் கூப்பனை நிரப்பி, சுய விலாசமும், முத்திரையும் இடப்பட்ட கடித உறையுடன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்
''சந்நிதி''
39, 36வது ஒழுங்கை
கொழும்பு – 06

சந்நிதி சோதிடம்


ஆசிரியர்
''சந்நிதி''
முழுப்பெயர்:.......................................................
பிறந்ததிகதி:........................நேரம்:.........................
விலாசம்:..............................................................
..............................................................................

இத்துடன் இணைத்துள்ள எனது பிரச்சனைக்கு சோதிட ஆய்வாளர் ''விக்னேஸ்'' அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.

திகதி .......................

..............................
கையொப்பம்

# அவுஸ்திரேலியாவிலிருந்து ஒரு மடல்




பல் சமய காலாண்டிதழான 'சந்நிதி' கடந்த இரண்டு ஆண்டுகளாக சமயப்பணிக்கே தன்னை அர்ப்பணித்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருவதையிட்டு கடல் கடந்த நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களாகிய நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் "ஞானபூமி", 'ஆன்மீகம்' போன்ற சமய சஞ்சிகைகளிலும் பார்க்க சிறந்த முறையில் வெளிவருவதையிட்டு "சந்நிதி" ஆசிரியரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அவுஸ்திரேலியாவிலிருந்து விடுமுறையில் இலங்கைக்கு சென்றிருந்த போது, 'சந்நிதி' வைகாசி மாத இதழ் ஒன்றினைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கண்ணுக்கு கவர்ச்சியாகவும் இதயத்துக்கு இன்பம் அளிக்கக் கூடியதாகவும் சமயக் கருத்துக்கள் பொதிந்த சிறப்பு மலராகவும் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மகோற்சவத்தினை விளக்கும் மலராகவும் அம்மாத இதழாகிய சந்நிதி விளங்கியது.

அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் தாய் மொழியாம் தமிழினை சிறப்புக்கலைப் பாடமாக பயின்ற நான். இறுதி வருடத்திற்கான ஆய்வுக் கட்டுரையினை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில் திரு.வை. அநவரதவிநாயகமூர்த்தி அவர்களின் ஆக்கங்கள் பலவற்றை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் எழுதிய ஆக்கங்களை வாசித்து வியந்திருக்கிறேன். அவ்வாறான சந்தர்ப்பம் இன்னொன்றை அண்மையில் இச் சஞ்சிகை மூலம் கிடைக்கப் பெற்றேன். "கொடியேற்றத் திருவிழா" என்னும் தலைப்பில் எனது பிறந்த

திருமதி இந்துமதி ஸ்ரீநிவாசன்
(பி.ஏ.சிறப்பு)
அவுஸ்திரேலியா

ஊரான இணுவையம்பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் தொடர்பான விபரங்களை வாசித்தறிய நல்ல சந்தர்ப்பம் ஒன்று கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நேரில் கண்டு தரிசித்தது போன்ற உணர்வினை ஏற்படுத்தி நின்ற அவ்வாலய வண்ணப் புகைப்படங்களை அட்டைப்படமாகக் கொண்டு வெளிவந்தமை மேலும் இச் சஞ்சிகை மெரு கூட்டி நிற்கின்றது. தொன்மையும் புகழும் வாய்ந்த எமது ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாக் காலத்தில் இவ்வாலயம் தொடர்பான ஆக்கங்களை இம்மலர் தாங்கி வெளி வந்ததும் சிறப்பிற்குரிய தொன்றாகும்.

இம்மலரை தயாரித்தளித்த 'சிவநெறிச் செம்மல்" வை.அநவரத விநாயகமூர்த்தி அவர்களுக்கும், மதிப்புக்குரிய சந்நிதி ஆசிரியர் திரு.வே.வரதசுந்தரம் அவர்களுக்கும் எனது ஊரின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றியை தெரிவிப்பதுடன் எல்லாம் வல்ல இணுவை ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரின் அருளுடன் அவர்களது சமயப் பணி மேன்மேலும் தொடர வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

# ஷீர்டி அற்புதங்கள்



மாயையின் அளவறியா சக்தி

பாபாவின் மொழிகள் எப்போதும் சுருக்கமானவை. மிருதுவானவை ஆழமானவை பொருள் செறிந்தவை திறமையானவை நன்றாக சமநிலைப்படுத்தப்பட்டவை. அவர் எப்போதும் திருப்தியடைந்தவராய் இருந்தார். எதற்கும் கவலைப்படவில்லை. அவர் சொன்னார் நான் ஒரு பக்கிரியான போதும் எனக்கு வீடோ மனைவியோ இல்லாதிருப்பினும் எல்லாக் கவலைகளையும் விட்டொழித்து நான் ஒரே இடத்தில் வசித்தாலும் தவிர்க்கமுடியாத மாயை என்னை அடிக்கடி துரத்துகிறது என்னை மறந்தாலும் அவளை மறக்க முடியவில்லை. அவள் என்னை எப்போதும் சூழ்ந்து கொள்கிறாள் பரமாத்ம ஸ்ரீ, கரிவினுடைய இந்த மாயை (தோற்ற சக்தி) பிரம்மா மற்றவர்களையும் துரத்துகிறது. பின் என்னைப் போன்ற ஏழைப் பக்கிரியைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? பரமாத்மாவிடம் சரண்புகுவோர் அவரது அருளால் அவளது பந்தங்களினின்றும் விடுவிக்கப்படுவர்.

மாயையின் சக்தியைப்பற்றி அம்மொழிகளால் பாபா பேசினார். ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா ஞானிகள் உயிருள்ள ரூபங்கள் என்று பாகவதத்தில் உத்தவருக்கு உபதேசிக்கின்றார். பாபா தமது அடியவர்களுக்காக யாது கூறியிருக்கின்றார் என்பதைக் கவனியுங்கள் யார் அதிர்ஷ்டசாலியோ எவருடைய பாவங்கள் ஒழிந்தனவோ அவர்கள் எனது வழிபாட்டை எய்துகிறார்கள் சாயி சாயி என்று கூறிக் கொணடிருப்பீர்களானல் நான் உங்களை ஏழ்கடலுக்கு அப்பால் எடுத்துச்செல்வேன் இம்மொழிகளை நம்புங்கள். நீங்கள் நிச்சயம் நன்மையடைவீர்கள். வழிபாட்டின் சிறுவிஷயங்கள் எட்டுப்பங்குகளோ பதினாறுபங்குகளோ எனக்குத் தேவையில்லை. எங்கு முழுமையான பக்தியிருக்கிறதோ அங்கு நான் அமர்கின்றேன். தம்மைத் தாமே முழுவதுமாக சரணடைவோர்களின் தோழரான சாயி அவர்களின் நன்மைக்காக என்ன செய்தார் என்பதைப்படியுங்கள்.

பீமாஜீபாடீல்

பூனா ஜில்லா ஜன்னா தாலுக்கா நாராயன்காவைச் சோந்தபீமாஜீ பாடில் என்பவர் பல வியாதிகளினாலும் நெஞ்சுவலியாலும் துன்பப்பட்டார் முடிவில் அது ஷயரோகமாக மாறியது அவர் எல்லாவித சிகிச்சைகளையும் முயன்று ஒரு பிரியோசனமுமில்லை எல்லா நம்பிக்கையையும் இழந்து முடிவாக கடவுளை நோக்கி அவர் வேண்டிக் கொண்டார். ஓ நாரயண மூர்த்தியே இப்போது என்னைக் குணப்படுத்தும் சூழ்நிலைகள் எல்லாம் நன்றாக இருக்கையில் நாம் கடவுளை நினைப்பதில்லை. கேடும் துர்அதிஷ்டமும் எம்மைத்தாக்கும் போது நாம் அவரை நினைக்கின்றோம். எனவே பீமாஜீ அப்போது கடவுளை நோக்கித் திரும்பினார். இவ்விஷயத்தில் பாபாவின் பெரும் அடியவரான நானாசாகேப் சந்தோர்க்காரை கலந்தாலோசிக்கத் தோன்றியது. தனது துன்பமனைத்தும் ஒரு கடிதம் எழுதி கருத்தைத் தெரிவிக்கக் கேட்டிருந்தார். நானா ஒரே வழிதான் இருக்கின்றது அதாவது பாபாவின் பாதங்களின்று உதவி பெறுவதேயாகும் என்று கூறினார். ஷீர்டிக்கு அவர் கொண்டு வரப்பட்டு பாபாவின் முன்னர் வைக்கப்பட்டார். திரு.நானாசாஹேப்பும், ஷாமா (மாதவ்ராவ் தேஷ்பாண்டேவும்) அங்கு இருந்தனர். முன்னைய தீய கருமங்காளாலேயே இவ்வியாதி என்று பாபா சுட்டிக் காண்பித்து முதலில் இதில் தலையிட தீர்மானம் இல்லாதவராய் இருந்தார். நோயாளியோ தாம் அனாதரவானவர் என்றும், அவரையே சரணாகதி அடைந்திருப்பதாகவும, அவர் தாம் கடைசிக் கதியென்றும் கருணை காட்டும்படியும் கூறி அலறத் தொடங்கினார். அப்போது பாபாவின் உள்ளம் உருகியது. அவர் கூறியதாவது, “பொறு, உன்னுடைய கவலைகளைத் துார எறி, உன்னுடைய துன்பங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டன.


ஒருவன் எவ்வளவுதான் நசுக்கப்பட்டு வேதனைப்பட்டவனாக இருப்பினும், இம்மசூதியில் கால் வைத்தவுடனே அவன் மகிழ்ச்சியின் பாதையில் செல்கிறான். இங்கே உள்ள பக்கிரி மிகவும் அன்பானவர். அவர் அவ்வியாதியைக் குணப்படுத்துவார்.

எல்லோரையும் அன்புடனும் ஆசையுடனும் பாதுகாப்பார் ஐந்து நிமிடத்துக்கு ஒரு முறை ஒருவர் ரத்த வாந்தி எடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் பாபாவின் சன்னிதானத்தில் எவ்வித வாந்தியும் இல்லை நம்பிக்கையும் கருணையும் கொணட மொழிகளை பாபா உதிர்த்த அத்தருணத்திலிருந்தே வியாதி குணமடையம் நிலைக்குத் திரும்பியது. அசௌகர்யமும் சுகாதாரக் குறைவும் உள்ள பீம்பாயின் வீட்டில் தங்கும்படி பாபாவால் கேட்கப்பட்டார். ஆனால் பாபாவின் உத்தரவுக்கு கீழ்ப்படியவேண்டும். அவர் அங்கு தங்கியிருக்கையில் பாபா அவரை இரண்டு கனவுகள் மூலம் குணப்படுத்தினார்.

முதல் கனவில் தன்னை ஒரு பையனாகவும் சவாய் செய்யுள் ஒப்பிக்காததற்காக உபாத்தியாரின் கடுமையான பிரம்படியை வாங்கிக் கஷ்டப்படுவதைப் போன்றும் கண்டார். இரண்டாவது கனவில் ஒரு கல்லை யாரோ ஒருவர் தனது நெஞ்சின் மீது மேலும் கீழும் உருட்டி கடுமையான வலியையும் வேதனையையும் உண்டாக்குவதாகவும் கண்டார்.

கனவில் அவர் பட்ட இக்கஷ்டத்துடன் அவரின் சிகிச்சை முடிவடைந்து அவர் வீடு திரும்பினார். பின்னர் அடிக்கடி ஷீர்டி வந்து பாபா தனக்குச் செய்ததை நன்றியுடன் நினைத்து ஷாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். பாபாவும் நன்றியுள்ள நினைப்பு மாறாத நம்பிக்கை பக்தி இவற்றைத் தவிர வேறெதையும் எதிர்பாக்கவில்லை மகாராஷ்ர மக்கள் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை தங்களது இல்லங்களில் சத்திய நாராயண பூசை எப்போதும் செய்கிறார்கள் ஆனால் தனது கிராமத்துக்குத் திரும்பியபோது பீமாஜீ பாடில் புதிய சாயி சத்திய விரத பூஜையை சத்திய நாராயன பூஜைக்கு பதிலாக தனது இல்லத்தில் ஆரம்பித்தார்.


## சோதிடக் கணிப்பீடுகள்



உங்கள் ஜாதகங்களை கணனியில் (computer) துல்லியமான கிரகஸ் புடங்களுடன் கணித்து இராசி, நவாம்ச, பாவ, சப்தவர்க்க, அஷ்டகவர்க்க, கிரகபலம், திசா, புத்தி, அந்தர விபரத்துடன் பெறலாம்.

வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் அந்நாட்டு நேரத்தில் கணிக்கப்படுகின்றன.

உங்கள் ஜாதகங்களிற்குரிய விரிவான வருடப்பலனை எம்மிடம் அறிந்து கொள்ளலாம். computer flopy; diskல் பதிவு செய்தும் ஜாதகங்களைப் பெற முடியும். ஜாதகம் கணிக்க நீங்கள் தர வேண்டிய விபரம், பெயர், பிறந்த திகதி, நேரம், பிறந்த இடம் மட்டுமே.

**VIGNES**

465/1A Havelock Road
Colombo 06 Sri Lanka
Telephone: 074-513233
Foreign callers Dial: 009474 513233

# நல்லூர் வீதியில் உலாவிய மூவர்

அந்த மூவர் சுவாமி முத்தியானந்தர் என்ற பெயருடைய கடையிற் சுவாமிகளும் இவருடைய சீடரான செல்லப்பா சுவாமிகளும் செல்லப்பா சுவாமிகளின் ஒரே ஒரு சீடரான யோகர் சுவாமிகளும் ஆவார். வைரமுத்துச் செட்டியார் நல்லூரைச் சேர்ந்தவர் இவர் கடையிற் சுவாமிகளுடைய உத்தம சீடர்.கடையிற் சுவாமிகள் வைரமுத்துச் செட்டியாரை முன்னிட்டே முதன் முதல் நல்லூருக்கு வந்தவர்.

முத்தியானந்தர் காலகதியில் பெரிய கடையையே இருப்பிடமாகக் கொண்டார் ஆனபடியினால் கடையிற் 'சுவாமிகள் என்னும் பெயரைப் பெற்றார். தினமும் கடையிற்சுவாமிகள் தமது அடியார் புடை சூழ நல்லூர் கந்தனிடம் வந்து திரும்புதல் வழக்கம் ஓட்டமாகவே வந்து உள் வீதியை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு ஓடி விடுவார்.

கோப்பாயைச் சேர்ந்த ஒரு அம்மையாருக்கு பாரிசவாதம் வந்து ஒரு கை வழங்க முடியவில்லை அந்த அம்மையாருக்கு கடையிற் சுவாமிகளைத் தரிசனை செய்தால் தனது நோய் நீங்கிவிடும் என்ற நம்பிக்கை. சுவாமிகளை அவர் எப்பொழுதுமே கண்டதில்லை. சுவாமிகள் நல்லூருக்கு வந்து செல்பவர் என்று கேள்விப்பட்டிருந்தார்.

அம்மையார் ஒரு நாள் கோவில் வாசலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தார் கடையிற் சுவாமிகள் வருகிறார் என்று யாரோ சொல்வதை அம்மையார் கேட்டார். மக்களின் பின்னே அம்மையாரும் ஓடினார் அம்மையார் வாசலுக்கு செல்வதற்கிடையில் சுவாமிகள் உள்வீதியைச் சுற்றி ஒடி வந்து விட்டார். கோயில் ஐயர் எல்லோருக்கும் பூ கொடுத்துக் கொண்டு வந்தார். சுவாமிகளும் ஐயரிடம் கைநீட்டினார் ஐயர் கைநிறைந்த பூக்களைக் கொடுத்தார். சுவாமிகள் அதனை வாங்கி வாயில் போட்டுக் குதப்பினார். அச்சமயம் அம்மையார் சென்று கையை நீட்டினார். சுவாமிகள் வாயில் குதப்பிய பூவினை எடுத்து கையில் பூசிவிட்டார். அன்றோடு அம்மையாருடைய பாரிசவாதமும் நீங்கி விட்டது. கடையிற் சுவாமிகள் தினமும் முருகன் சந்நிதிக்கு வந்து செல்வதை ஒருவர் தேரடியில் இருந்து பார்த்துக்கொண்டிருப்பார். ஜனங்கள் கடையிற் சுவாமிகளின் பின்னே ஓடிச் செல்வதைப் பார்த்து ரசிப்பார். அவருக்கு ஒரு ஆசை தோன்றியது. தானும் கடையிற் சுவாமிகளை குருவாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த ஆசை அவர் செல்லப்பா சுவாமிகள் சாமானிய மக்களின் கண்களுக்கு இந்தச் சீவன் முத்தர் வீசர்ச் செல்லப்பராகக் காட்சியளித்தார்.

செல்லப்பர், கடையிற் சுவாமிகள் சாராயம் குடிப்பவர் என்று கேள்விப்பட்டுள்ளார் அதனால் தனது குருநாதரைத் தரிசிக்கும் போது ஒரு சாராயப் போத்தல் கொடுக்க வேண்டும் என்று ஒரு சாராயப் போத்தலும் ஒரு வெள்ளி ரூபாவும் சேர்த்து வைத்திருந்தார். ஒரு நாள் கடையிற் சுவாமிகள் வருகிறார் என்பதை அறிந்து சாராயப்போத்தலை எடுத்துக் கொண்டு ஓடினார் சாராயப் போத்தல் வெறுமனே இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார். குருவைத் தேடித் தான் அல்லவா செல்ல வேண்டும் என்று திட்டம் போட்டு குருவைத் தேடிச் சென்றார். செல்லப்பர் துரத்தே வருவதைக் கண்ட கடையிற் சுவாமிகள் பக்கத்தில் இருந்த கடலைக்காரியிடம் ஒரு முழு ரூபா வாங்கி அதனை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து வைத்துக் கொண்டார். செல்லப்பர் கிட்ட வந்ததும் கடையிற் சுவாமிகளின் காலில் விழப்போனார். கடையிற் சுவாமிகள் அவரைத் தாங்கிப்பிடித்துக் கொண்டு தான் வைத்திருந்த முழுரூபாயை செல்லப்பரிடம் கொடுத்தார். கடையிற் சுவாமிகள் தன்கையிலிருந்த் குடையைச் செல்லப்பரின்



ஆத்மஜோதி
நா.முத்தையா


தலையில் வைத்துச் சிறிது நேரத்தின் பின் ஓடடா என்றார். செல்லப்பர் தேரடிக்கு வந்து 15 நாட்கள் மூச்சுப் பேச்சற்று ஒரே படுக்கையாய்ப் படுத்துவிட்டார் இதுதான் செல்லப்பருக்குக் கிடைத்த ஸ்பரிசதீட்சையாகும்.

செல்லப்பர் இரவு பத்துமணிக்கு மேல் ஊர் அடங்கிய பின் கோயில் சந்நிதிக்குச் செல்வார். பிதாவே பிதாவே என்று இரவு முழுவதும் முருகனோடு பேசிக்கொண்டே இருப்பார். காலை நாலரை மணிக்கு கோயில் மணி ஓசை கேட்டதும் தமது பழைய இடத்தில் சென்று முடங்கிக் கொள்வார். யோகிகள், ஞானிகளுக்கு இரவு பகலாவதும் பகல் இரவாவதும் இப்படியே தான். யோகர் சுவாமிகள் இக்காலத்தில் கிளிநொச்சியில் அரசாங்க உத்தியோகம் பார்த்தவர் செல்லப்பா. தனது எதிர்காலச் சீடனை தேடிக் கிளிநொச்சி சென்றார். ஜன்னலால் அவரைப் பார்த்தார். யோகர் நயனதீட்சை பெற்றதும் செல்லப்பருக்குப பின்னாலேயே நல்லூருக்கு வந்து விட்டார். யோகர் நல்லூர் தேரடியிலேயே தனது குருநாதருடன் தங்கி விட்டார். செல்லப்பர் தனது ஒரே ஒரு சீடனுக்கு நான்கு மகா வாக்கியங்களை உபதேசம் செய்தார்.

எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்புமில்லை. நாம் ஒன்றும் அறியோம். முழுவதும் உண்மை.

இந்த நான்கு மகா வாக்கியங்களுக்குள்ளும் அடங்காத விஷயங்கள் எதுவும் இல்லை என்றே கூறலாம். செல்லப்பர் சில காலம் யோகரை தன்னுடன் வைத்து வேட்டைவாளி தான் எடுத்த புழுவைக் கொட்டிக் கொட்டி தன்னைப் போல் ஆக்குவது போன்று செல்லப்பரும் யோகரைப் பக்குவப்படுத்தி கதிர்காமத்துக்கு ஓடுங்கடா என்று சொல்லி உடனிருந்தவர்களையும் துரத்திவிட்டார்.


தாய்லாந்திலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
**Computer Desk**
கம்பியூட்டர் மேசை
இப்பொழுது மிகவும்
மலிவான விலையில்
கிடைக்கிறது.
பூரண வசதிகளைக் கொண்ட
கைக்கடக்கமான
மேசையின் ஆகக்குறைந்த
விலை ரூ. 3690/-
மொத்தம் 10 Model கள்
உண்டு.




விபரங்களுக்கு :
ஜனாடன்ஸ்
(பிரைவேட்) லிமிட்
90, காலி வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு 04.
Tel.: 596013

# பாபா பதிக்கும் சுவடுகள்

## காருண்ய சீலா! தீனதயாளா! புட்டபத்தி வாசா! சாயி ஈசா!





சத்திய சாயி ஈசன் பதிக்கும் சுவடுகள் கண்டு, கேட்டு; உணர்ந்து மெய்விதிர் விதிர்த்துக் கண்ணீர் மல்கி நெஞ்சம் குழைகிறது.

வே.வரதசுந்தரம்

ஒடுக்கமான வாயுள்ள ஒரு மட்பாண்டம். அதனுள்ளே கடலை இதனைக் கண்ட குரங்கு தன் கையை ஒடுக்கமான வாயூடாகச் செலுத்தி கடலையினை இறுகப் பற்றுகிறது.

கடலையை இறுகப் பற்றியதும் கையினை வெளியே எடுக்க முடியாது திண்டாடுகிறது. கடலையைக் கைவிட்டால் போதும் கை வெளியே வந்து விடும். ஆனால் குரங்கோ அப்படிக் கையை விடுவதற்கு பதிலாக, மேலும் மேலும் கடலையை இறுகப் பற்றுகிறது. குரங்கு பிடிப்பவர்கள் கைவசம் மாட்டிக் கொள்கிறது. தன்னை அழித்துக் கொள்கிறது. இது போல மனித மனமும் பற்றுக்களை மேலும் வளர்த்து ஆசைகளுக்கு அடிமையாகித் தன்னை அழித்துக் கொள்கிறது.

எனவே ஆசைகளை அறுத்து ஈசனைப் பற்றுக் கோடாகப் பற்றி நாம் உய்தியடைய வேண்டும். பாபா கூறும் இவ்விழுமிய கருத்துக்களை Taming the Monkey Mind என்ற நூலில் ஓர் ஆங்கிலேயப் பெண்மணி அழகாக எடுத்துச் சொல்கிறார். இனி அந்த நூல் உருவான கதையைப் பார்ப்போம்.

பிலிஸ் கிரிஸ்டல் என்ற ஆங்கிலேயப் பெண்மணி ஒரு நல்ல எழுத்தாளர். பாபாவைப் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார்.

ஒரு தடவை பாபா அவரிடம் " நீ இன்னுமொரு நூல் எழுதப் போகிறாய் " என்றார். இதைக் கேட்டுத் துணுக்குற்ற அப் பெண் "நூலின் பெயர் தெரியவில்லையே" என்றார். ஓர் அழகிய சிறிய பேனாவை பாபா அவரிடம் கொடுத்து விட்டு " புத்தகம் இப் பேனாவில் இருக்கிறது" என்றார். அதில் "parker -made in UK" என்றிருந்தது.

இது அப்பெண்மணிக்குப் பிறிதொரு சம்பவத்தை நினைவுக்குக் கொண்டு வந்தது. ஓர் ஆங்கிலேயப் பக்தனுக்கு பாபா ஒரு தங்க மணிக்கூட்டை அன்பளிப்பாகக் கொடுத்தார். அவ்வன்பளிப்பைப் பெற்றுக் கொண்ட அவர் “இதனை நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்லும் போது சுங்கத் திணைக்கள அதிகாரிகள் ஆவணங்கள் கேட்பார்களே சுவாமி” என்றார்.

உடனே சில நிமிட நேரத்தில் ஒரு ரசீதினை பாபா அவரிடம் கொடுத்தார். அந்த ரசீதில் அவ்வாங்கிலேயரின் ஊரில் உள்ள ஒரு கடையின் பெயர், மணிக்கூட்டின் விபரம், விலை ஆகியவை இருந்தன. “ இப்போது உமக்கு ஒரு பிரச்சினையும் இருக்காது” என்றார் பாபா.

சொந்த ஊர் திரும்பியதும் அந்தக் கடைக்குச் சென்று அப்பேனா பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தார். “இந்த விற்பனை எம்மால் என்றுமே மறக்கமுடியாதது. ஏனெனில் அவ்வாடிக்கையாளர் விசித்திரமானவராகக் காணப்பட்டார். அவரது அசாதாரணமான சிவப்பு நிற உடை ஆபிரிக்கர் போன்ற தலைமயிர் இதனால் அந்த விற்பனை நினைவில் இருக்கிறது” என்றார் அந்தக் கடை ஊழியர். இதனைத் தொடர்ந்து அவரது சந்தேகம் தெளிந்தது.

பேனாவினைப் பாபாவிடம் பெற்றுக் கொண்டதும் இந்த நினைவெல்லாம் அவர் மனதில் தோன்றியது. ஒருநாள் தியானத்தில் இருக்கும் போது தனது நூலுக்கான தலைப்பு அவருக்குக் கிடைத்தது. குரங்கு மனத்தை எப்படி ஆற்றுப் படுத்துவது என்பதே அத்தலையங்கம் Taming the Monkey mind. இந்நூலில் காணப்படும் கருத்துக்கள் எமக்குப் பயன் தருபவை. ஆதலால் அவற்றை இங்கு பார்ப்போம்.

குரங்குகள் தம் கண்ணில் படும் பொருட்களினால் கவரப்படுகின்றன. அல்லது சரியாகச் சொல்லப் போனால் அவற்றின் கவனம் திசை திருப்பப் படுகிறது. அத்தகைய பொருட்கள் பழம், கடலை ஆக இருக்கலாம். அல்லது அவற்றின் ஆர்வத்தினைத் தூண்டவல்ல பிரகாசமான கவர்ச்சியான நிறங்களுடைய பொருட்களாக இருக்கலாம்.



நீ எங்கிருந்தாலும் உன்னைப் பாதுகாத்து வழி நடத்திச் செல்ல நான் உன்னுடனேயே உள்ளேன். பயமின்றி முன்னேறுவாயாக.

ஸத்தியத்தை விட உயர்ந்த தர்மம் கிடையாது என்பதையும் சேவை, செய்வதைவிட பலன் அளிக்கக்கூடிய பிரார்த்தனை கிடையாது என்பதையும் நினைவு கொள்.

- பகவான் பாபா -

அவற்றை பறித்துக் கொண்டு பறந்து செல்வதே அவற்றின் நோக்கம்.

இது போன்று மனிதர்களும் எல்லா வற்றினாலும் கவரப்பட்டு, அவர்களின் நாட்டம் திசை திரும்பி பதட்டமடைந்து அமைதி இழந்து காணப்படுகிறார்கள். “மனித மனமும் எவ்வாறு குரங்கினை ஒத்திருக்கிறது பாருங்கள். குரங்கிலும் பார்க்க மனித மனம் அங்கலாய்க்கிறது, பரபரக்கிறது, இங்கும் அங்கும் அலைமோதுகிறது. இங்கும் அங்குமாக மனித மனம் அலையும் போது பலமைல் துாரத்தையும் பல நூற்றாண்டு காலத்தையும் ஒரு கண் திறந்து மூடும் நொடிப் பொழுதில் கடப்பதைக் காண்கிறோம். ஒரு ஆசையில் இருந்து பிறிதொரு ஆசைக்கு மனித மனம் பாயும் போது அது அச்சுற்று வட்டார பாசத்தில் தானும் சிக்கிக் கொள்கிறது:- இப்படி அந்த நூலில் கூறப்படுகிறது.

# வில்லூன்றிக் கந்தனின் பெருமை

வரலாற்றுப் பின்னணி உடைய இலங்கை ஆலயங்களில் திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தனின் வரலாறும் மிகவும் பிரபலம் வாய்ந்த ஒன்றாகும்.

இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூலமூர்த்தியே புதுமையானவர். இந்தியாவில் உள்ள ஒரு முருகபக்தரின் விருப்பத்துக்கிணங்க இம்மூர்த்தி இந்தியாவில் வார்க்கப்பட்டு தெட்சண கைலையிலே பிரதிஷ்டை செய்யப்பட்டு இங்குள்ள அடியார்கள் வணங்கி அருள் பெறுவதற்காக கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட ஒரு மகிமை வாய்ந்த தெய்வம். இவ்விடத்திற்கு வில்லூன்றி என்ற பெயர் உண்டாகியதற்கும் ஒரு காரணம் கூறுவர். இராமர் இங்கு விஜயம் செய்த போது தமது வில்லை இவ்விடத்தில் ஊன்றியதால் வில்லூன்றி என்ற பெயர் ஏற்பட்டதாக ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு.

சரித்திரக் கணிப்பின்படி ஒரு பெட்டியில் அடைக்கப்பட்ட இம்மூர்த்தி ஒரு பாய்க்கப்பலில் ஏற்றப்பட்டு கடலில் வந்து கொண்டிருந்த போது அது கோணேசர் மலைக்கு அருகேயுள்ள அரிமலை அருகே காற்றில்லாமல் நிற்க வியாபார நிமித்தமாக வடகரை சென்று திரும்பிய படகொன்று சமீபிக்க அப்படகிலுள்ளோரை அழைத்து இவ்விடம் திருகோணமலையா என்று விசாரித்த பின்னர் மூர்த்தி அடங்கிய பெட்டி அவர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர்கள் மூலமே இப்பெட்டி கரை சேர்ந்ததாகவும் அறிய முடிகிறது. அப்போது இலங்கையை ஆண்ட போர்த்துக்கேய ஒல்லாந்த அரசுகள் முடமாண்டான் என்றழைக்கப்படும். கடற்பகுதியை (தற்போதைய மனையாவழி) துறைமுகமாய் உபயோகித்தார்கள் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இப்பெட்டியை ஏற்றிவந்த படகுச் சொந்தக்காரர் தம் படகை மகாராசாமலைத் துறையில் (தற்போது ராசாமலை) கட்டி விட்டு தன்னிடம் கையளிக்கப்பட்ட பெட்டியைத் திறந்து பார்த்த போது ஆறுமுகங்களையுடைய கந்த சுவாமியாரும் இரண்டு தேவிமாரும் வேலாயுதமொன்றும் பார்க்க வறப் பொல்லும் சில பூசைச் சாமான்களும் பணமாய் எழுபத்தைந்து இறைசாலும் அப்பெட்டியினுள் இருக்கக் கண்டு மகிழ்ச்சியும் அதிர்ச்சியுமடைந்தார்.


அவருக்கு தொடர்ந்து என்ன செய்வதென்று தெரியாததால் அவ்வூர் மணியகாரரும் குருகுலத்தவருமான ஸ்ரீ வே.ம.கதிர்காமர்மணியம் அவர்களுக்குச் செய்தியனுப்பி அவரை வரவழைத்தார். அவ்விடத்துக்கு உடனடியாக வந்த மணியகாரரும் உடனடியாக சில முக்கிய பிரமுகர்களை அழைத்து ஒரு கூட்டங்கூடி முடமாண்டான் என்ற அவ்விடத்திலே சுபானு வருடம் சித்திரை மாதம் கி.பி.1763ல் அஸ்திவாரமிட்டுத் தூபி மண்டபம், தீர்த்தக் கிணறு முதலானவைகளைக் கட்டி



பிரபல நாவலாசிரியர்
தமிழ்மணி பாலேஸ்வரி
நல்லரெட்ணசிங்கம்

முடித்து வடதேசமிருந்து வந்த ஸ்ரீ.சு.பரசுராமஐயரைக் கொண்டு சிந்து வருடம் ஆவணி மாதம் (கி.பி.1768) இம்மூர்த்திகளை ஸ்தாபனம் பண்ணிக் கும்பாபிடேகம் செய்ததாக அறிய முடிகிறது. இன்று வரை இவ்வாலயம் அமைக்கப்பட்டிருந்த மலை கந்தசுவாமி மலை என்றே பேசப்பட்டு வருகிறது. அவ்விடத்தில் இக்காலத்திலும் ஒரு நாகதம்பிரான் கோயில் எஞ்சி இருப்பதாக அறிய முடிகிறது.

அவ்வாண்டு முதலாகப் பூசைகள் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றதாகவும் இன்று பிற தேவைகளுக்காக உபயோகிக்கப்படும்



# நினைத்த காரியத்தினை நிறைவேற்றும் வள்ளல்

அவ்விடத்தில் உள்ள குளமே தீர்த்தமாடுவதற்காக வெட்டப்பட்ட குளம் என்றும் கூறப்படுகிறது.

1782ல் பாரிய யுத்தம் ஒன்று ஏற்பட்டதாயும் ஆங்கில யுத்தக் கப்பல்கள் தாராளமாக முடமாண்டான் கடலில் வந்து தங்கியதாகவும் அறிய முடிகிறது. அவ்வேளை இக்கோயிலைப் பராமரித்தவர் சம்மானொட்டியார் சவரியப்பர் என்றும் அவருக்குப் பின் ஸ்ரீ பெரிய ஆனந்தர் என்பவர் நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீ பெரிய ஆனந்தர் மணியகாரனாக நியமனம் பெற்ற மூன்றாம் வருடம் (கி.பி.1795) ஆங்கில சேனாதிபதி நடாத்திய யுத்தத்தினால் கோயில் சேதமடைந்து ஸ்ரீ பெரிய ஆனந்தரும் காயமடைந்து மாண்டதாகத் தெரிகிறது.

அப்போது பிரபலமாக இருந்த ஸ்ரீ வேலப்ப மணியம் அவர்களால் இம்மூர்த்திகள் தம்பலகாமம் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்புக் காரணமாகத் தம்பலகாமம் கோணேசர் கோயிலில் வைத்துப் பூசை செய்யப்பட்டன.

ஒரு சில வருடங்களின் பின் வேலப்ப மணியம் அவர்களின் சொப்பனத்தில் இறைவன் தோன்றித் தம்மை திருக்கோணமலையில் உள்ள வில்லூன்றி என்னும் இடத்தில் ஸ்தாபிக்கும்படி பணிக்க அவ்வண்ணமே அவ் விடத்தில் ஸ்ரீ வைரவ நாதக் குருக்கள் சுப்பையா குருக்கள் என்போர் பூசை பண்ண வழிபட்ட பிள்ளையார் கோயிலில் இம்மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

பின்னர் அக்கோயில் உரிமையாளர் களாயிருந்த பிராமணர்களிடமிருந்து கந்தருக்கு ஆலயம் அமைப்பதற்காகத் தருமமாக ஒரு நிலம் பெற்று அப்பிராமணர்களும் அவர்கள் தம் சந்ததியினரும் தொடர்ந்து இவ்வாலய பூசைக் கிரமங்களைச் செய்வதற்கு 1809 ஆனி 1ம் திகதி ஒரு உடன்படிக்கை கைச்சாத்திட்டப்பட்டது.

பிரசோற்பத்தி வருடம் தை மாதம் 5ம் திகதி தேவாலயத்துக்கு அஸ்திவாரமிடப்பட்டு மூலஸ்தானம், அர்த்தமண்டபம் முதலான மண்டபங்கள் கட்டி ஓட்டால் வேய்ந்து களஞ்சியம், வீடு, கிணறு, யாகசாலை வைரவஸ்தாபனம் சுற்று மதில் யாவும் கட்டி முடிந்து வெளிவீதியில் ஒரு கேணியும் கட்டி முடித்தாக அறிகிறோம். (ஆயின் தற்போது கேணி காணப்படவில்லை) ஸ்ரீ முக வருடம் ஆவணியில் (கி.பி 1813) கும்பாபிடேகம் நிறைவேற்றப்பட்டு நித்திய நைமித்திய பூசைகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீ ஆனந்தர் வினாசித்தம்பிக்குப் பின் அவர் தமையனார் மகன் ஸ்ரீ கணபதிப்பிள்ளை அவர்கள் சிவபதமடைய அவரது தம்பியாராகிய கந்தப்பர் மாரிமுத்து பராமரிப்பாளராக நியமிக்கப்பட்டார். பார்த்திப வருடம் (1825) ஸ்ரீ க.ம.வேலப்பமணியம் அவர்களின் சேவையைப் பாராட்டி அவருக்கு ஸ்ரீ வர்ணகுலசூரிய வேலப்ப முதலியார் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீ கதிரவேலு முதலியார் என்பவர் சுவாமிக்கு வேண்டிய ஆபரணங்கள், பித்தளை, வெள்ளிப் பாத்திரங்கள், ஆகியவற்றைக்

கோயிலுக்கு அன்பளிப்புச் செய்து 1830ல் கும்பாபிடேகம் செய்வதற்கான செலவுகளையும் பொறுப்பேற்றார். அத்துடன் ஒரு பெட்டகம் செய்து சகல பொருட்களையும் அப்பெட்டியினுள் வைத்துப் பூட்டி அப்பூட்டின் திறப்பை மாரிமுத்துவின் கையிற் கொடுத்து மற்றத் திறப்பை தனது பேரனாகிய சுவாமிநாத பிள்ளையிடம் கொடுத்தார். 1835ல் ஸ்ரீ க.ம. வர்ணகுலசூரிய வேலப்ப முதலியார் இறைவனடி சேர மாரிமுத்து அவர்களே சகல பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டார்.

1891ல் அடுத்த கும்பாபிடேகம் சிற்றம்பலம் என்பவரின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டது. அந்நாளில் இருந்து பல ஆண்டுகளாக ஸ்ரீலஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பூசகராக இருந்து சிறப்பாக பூசை செய்தார். அவரின் பின் ஸ்ரீ.வை.இராமலிங்கக் குருக்கள் பூசகராகி அவர் பின் அவரது சிரேஷ்ட புத்திரன் ஸ்ரீ பூரணானந்தேஸ்வரக் குருக்கள் பூசகரானார். தற்போது திரு.மு.ம.சுப்பிரமணியம் அவர்களின் சந்ததியினரும் பூரணானந்தேஸ்வரரின் பரம்பரையினரும் ஸ்ரீ வேலப்பமணியம் அவர்களின் பரம்பரையினருமே கோயில் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.

இத்தலத்தின் ஒரு விசேடம் என்னவென்றால் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாதவாறு மூலமூர்த்தியே சில விசேட உற்சவங்களின் போது வீதியுலா வந்து அடியார்களுக்குத் காட்சி கொடுப்பதாகும். இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இப்பதியில் பூசைகள் ஒழுங்காகவும் கிரமமாகவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாலயத்தின் குருக்களாக பூரணானந்தேஸ்வரக்குருக்களின் பேரன் ஸ்ரீ சுதானந்தேஸ்வர சர்மா அவர்கள் திகழ்கிறார். பல அற்புதங்கள் நிறைந்த இம் மூலமூர்த்தியை நாமும் வேண்டி வரம் பெறுவோமாக.


காண்டம்

முனிவர்களால் எழுதப் பெற்ற காண்டம் என்னும் நாடி வாக்கியத்தில் உங்கள் பலா பலன்களை அறிந்து வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள்.

ரிஷி. எஸ். மணி

144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு.06
தொலைபேசி இல.586218

# இது தகுமோ! இது தகுமோ! இது தகுமோ!



திருமருகல் எனும் திருப்பதிக்கு எழுந்தருளுகிறார் ஞானசம்பந்தப் பெருமான். அன்பினால் ஐயனை வணங்கி அப்பதியில் தங்குகிறார். ஒரு நாள், அன்பு மீதூர ஐயனைத் தொழச் செலும் சம்பந்தர் திருச்செவியில் ஒரு பெண்ணின் அழுகுரல் அவலக்குரலாய் விழுகிறது அன்னையிடம் அன்புப்பாலுண்ட அந்த ஐயன் அருளினால், அவ் அவலக்குரல் கேட்டு அதிர்கிறார் ஆலயம் மறந்து அவர் கால்கள் அவ் வழுகுரல் நோக்கிச் செல்கின்றன. அன்பரோடு அழும் அப்பெண்ணிடம் வந்த ஐயன், அழுகைக்கான காரணம் கேட்கச் சோர்ந்த அப்பெண்ணும் சொல்லத் தொடங்குகிறாள்.

அயலூரில் ஒரு வணிகன் ஏழு பெண்களைப் பெற்றும் இளையாத பெருஞ் செல்வன் அவன் தன் மருகனொருவன் மாமனிடம், 'உன் முதல் மகளை என்க்கு வதுவை செய்திடுக' என வரம் வேண்டி நிற்கிறான் "தருகிறேன்;" எனச் சத்தியம் செய்த அம்மாமன் மனம் நிறையப் பணம் பெற்று மகளை மாற்றானொருவற்கு மனைவியாக்க, மனம் நொந்த மருகன் "மறுமகளையேனும் என் திருமகளாய்த் தா" என மீண்டும் இறைஞ்சுகிறான் மறுமகளைக் கேட்கும் மருமகனிடம் மாமனின் வஞ்சனை வளர்கிறது. இங்ஙனமாய் அவன் ஆறு பெண்களும் அயலவர்க்காக அன்பு நிறைந்த அவ்வணிகன்தன் கடைப்பெண், வஞ்சனை நிறைந்த தந்தையின் சிந்தையை நொந்ததால் தன் மைத்துனனுடன், உடன்போக்குக்கு உடன்பட்டனள் சிந்தை மகிழப் புறப்பட்ட அக்காதற் கிளிகள் எந்தை திருமருகல் ஆலயம் சார இருள் சூழ்ந்தது.

தன் வாழ்விலும் காலை இருள் சூழும் என்றறியாது அன்புக் காதலனுடன் அருகிருந்த மடத்தில் தங்கினள் அம்மடமாது. மாண்பினால் தன் காதலியைத் தீண்டாது கிடந்த அவ்வணிகனை அங்குற்றதோர் பாம்பு தீண்ட நித்திரை அவனுக்கு நிரந்தரமாயிற்று. பொழுது புலர, அன்போடு தன் அத்தானை அழைத்த பாவை அவன் செத்தான் எனும் செய்தியறிந்து திகைக்கிறாள் தந்தையை மறுத்துப் புறப்பட்டதால் தாய் வீடில்லை மணம் முடியாததால் மாமன் வீடுமில்லை இருதலைக் கொள்ளி எறும்பாய்த் துடிக்கிறாள் பேதை ஐயன் கழல் நினைந்து "சடையா சரண் நீ" என வெருவா விழும் அவள் நிலைகண்டு சிந்தை நொந்த சீர்காழிச் செல்வர் கதறும் அக்கனியை ஐயன் சந்நிதி வாசல் அழைத்து வருகிறார் மூலத்தானத்தில் உறையும் ஆலத்தாலும் அழியாத ஐயனை நேர்விழியால் நோக்குகிறார் சம்பந்தர். பார்வையில் கோபம் "தனியனாய் மெலியனாய் நிற்கும் இவளைத் தண்டித்தல் தகுமோ?" எனச் சம்பந்தர் உளம் கொதிக்கிறார் அப்பெண் வேதனையை சம்பந்தர் தன் வேதனையாய் உணரப் பாடல் பிறக்கிறது

"சடையா எனுமால் சரண் நீ எனுமால்
விடையா எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உன் மெலிவே"

இப்பாடலின் முதலிரு அடிகளும் அப் பெண்ணின் பெருந்துன்பத்தை



கம்பவாரிதி
இ.ஜெயராஜ்

வெளிப்படுத்துகின்றன நான்காம் அடியில், அந்நங்கைக்காய் திருமருகலுறை சிவனை அருள் பெருக நியாயம் கேட்கிறார் ஐயன் இம் மூன்று அடிகளும் சூழலோடு பொருந்திப் பொருள் தருகின்றன.

# வள்ளி மகிழ் வில்லூன்றித் தெய்வம்



கழகப் புலவர்
பெ.போ.சிவசேகரனார்

அள்ளிச் சொரிவாய் அடியடியாய்த் தந்திடுவாய்
வள்ளிக்கு வாய்த்த வடிவேலன் ----- வில்லூன்றிக்
கந்தன் புகழைக் கவியாக்க ஆலடிவாழ்
ஐந்துகரத் தண்ணா வருள்

சீலமணி மார்புமருட் கண்களீ ராறுமுகச்
செந்தா மரையி னழகும்
திகழ்கடப்ப மலர்மாலை அணிவித்து
மகிழ்செல்வர்
தினம்பரவு முடிமணியும்
நாலுமுக னோடுதிரு மால்பணியுங் கழலடியும்
தினமொலிக்குங் கிண்கிணியும்
ஞானசிவ காமியிரு காதுகுளிர மொழிபேசும்
நாவுந்தோள் களீராறும்

காலனெனை யணுகாமற் காக்கின்ற வடிவேலும்
காட்டியென்றன் கண்முன்னே
கருணைபொழி தெய்வமாய் கற்பூர ஜோதியுள்ளே
காட்சிதந் தருளுவாய்
கோலமயில் மீதுகுற வள்ளிமகிழ் வில்லூன்றிக்
கோயில்மகிழ் தெய்வமே
கோடிதவஞ் செய்தவர்கள் தேடிவரு கின்றதிருக்
கோணாசலப் பெருமாளே!

---

"மடையார் குவளை மலரும் மருகல்;" என்ற மூன்றாம் அடியில் மட்டும் முரண்பாடு அப்பெண்ணுக்காய்க் கோபம் கொண்டு இறைவனிடம் நியாயம் கேட்கும் சம்பந்தர்.
"மடைகள் நிறையக் குவளை மலரும் மருகல் உடையானே"

என இறைவனைப் போற்றுதல் பொருத்தமா? திருமருகற் பதியின் வளத்தைச் சாற்றி நிற்கும் அவ்வரி அவ்விடத்தில் வந்ததேன்? துவளும் அப்பெண்ணின் துடிப்பின் முன், இறைவனைப் புகழும் இவ்வடி பொருந்தாமல் நிற்கிறது காரணம் தேடுவோர்க்குக் கைகொடுக்கிறது 'பிறிது மொழிதல்' எனும் அலங்காரம் வெளிப்படையாய்த் திருமருகல் வளமுரைக்கும் அவ்வடி, உட்கொண்ட குறிப்புப் பொருள் காண உளம் மகிழ்கிறது சம்பந்தர் அவ்வடியூடு இறைவனுக்குக் குறிப்பாய் உணர்த்தும் அச்செய்தி இதோ.

"இறைவா! உன் திருமருகலில்,
நீர் நிறைந்த மடைகளிலே வாடிக் கிடக்கும் குவளைப் பூக்கள் எலாம் சூரியனைக் கண்டு அவ்வாட்டம் நீங்கி மலர்தலை 'நீ அறிதில்லையோ?"

இதோ பார் நீர் நிறைந்த மடை போல் கண்ணீர் நிறைந்துள்ள இப்பெண்ணின் கண்களை அதனுள் வாடிக் கிடக்கின்ற குவளை போன்ற அவள் விழிகளை கோடிச் சூரியப் பிரகாசமான உன்முன் வந்தும் ஏன் அவை இன்னும் மலரவில்லை? சூரியனுக்கு இருக்கும் ஆற்றல் கூடவா உனக்கில்லை? நீ நினைத்தால் இப்பெண்ணின் கண்குவளை மலராதா?"எனும் இத்தனை பொருள்களும் 'பிறிது மொழிதல்;' அலங்காரமாய் அவ்வோரடியில் நின்று அப்பாடலை உயர்த்துகின்றன.

வெளிப்படையாய் நோக்க வேறாய் நிற்கும் அம்மூன்றாம் அடியை சூழ்நிலையோடு பொருத்தி சுகம் பெறச் செய்கிறது இவ்வலங்காரம் இத் தேவாரப் பாடலின் அருட்தன்மையை மிகைப்படுத்தி நிற்கும் இவ்வலங்காரத்தைக் காண அருட்பாடல்களிலும் இவ் இரசனைப் பார்வை அவசியம் என்று தெரிகின்றதல்லவா?

# நிலையான அர்த்தங்களும்

இந்து மதம் அர்த்தமுள்ள மதம். இது மிகவும் பழமையானது. பல்வேறு மதங்கள் தோன்றி மறைந்தாலும் பல வேறுபட்ட மதங்கள் ஒன்றா சங்கமித்துக் கொண்டாலும் இந்து மதம்மட்டுமே தனித்து விளங்குவதற்குக் காரணம் இந்து மதத்திலுள்ள அடிப்படைத் தத்துவங்களும் திடமான கொள்கைகளும் தான்.

இந்து மதம் பல படைப்புகளைக் கவசமாகக் கொண்டுள்ளது. அவற்றுள் வேதங்கள் புராணங்கள் இதிகாசங்கள் சமய வரலாறுகள் அடங்கும்.

இந்த இதிகாசங்களில் இன்று பெயருடன் புகழுடன் விளங்கும் காவியங்கள் இராமாயனமும் மகாபாரதமும் ஆகும். இக்காவியங்களில் வருகின்ற கதாபாத்திரங்களில் ஒரு குடும்பத்தின் பாசப் பிணைப்புகளையும் ஒற்றுமை வேற்றுமைகளையும் ஏற்றம் இறக்கங்களையும் ஊடல் அன்புக்கூடல்களையும் காண்கிறோம். அதே சமயத்தில துய்மையான அரசியல் வழிமுறைகளையும் சாணக்கியத் தன்மைகளையும் அரசியல் நுனுக்கங்களையும் இங்கிருந்து பாடமாக கற்றுக் கொள்ளவும் முடிகிறது. நீதி நியாயங்களுக்கு இங்கு ஒரு பகவத் கீதையும் உண்டு. இன்றைய அறிவியல் உலகில் நாம் காணக்கூடிய பல விஞ்ஞான சாதனைகளுக்கான உத்வேகங்களும் எண்ணங்களும் இத்தகைய இதிகாசத்திலுள்ள ஒரு சில சம்பவங்களிலிருந்து கூடத் தோன்றியிருக்கலாம்

பாரதத்தில் திருதராட்டினன் போரை ரசித்த தொலைநோக்குக் காட்சி இன்றைய சட்லைட்டையும் இராமாயணத்தில் இராவணன் சீதையைக் கடத்தியதின் தாக்கத்துக்கு இன்றைய விமான வழி மார்க்கத்தையும் அன்று நடந்த யுத்த முனைகளின் யுத்திகளுக்கு இன்று நடக்கும் ஏவுகணைகளின் சக்திகளையும் ஒரு சில உதாராணமாக எடுத்துக் கூறலாம்.

இந்து மத வழிபாட்டில் உருவக வழிபாட்டு முறை முக்கியமானதொன்றாகும் ஒரு உருவம் நம் மனதில் ஆழமாக பதிவதற்கு நம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட பழக்கவழக்கமும் காரணம் ஆகலாம். இந்த வழிமுறையைத்தான் இன்றைய கல்வி முறையும் போதிக்கின்றது. ஐந்து வயதில் ஒரு உருவத்தை வர்ணமாகத் தீட்டி பாடமாக மனதில் பதிக்கும் மாணவனுக்கு அது ஐம்பது வயதில் மனப்பாடமாக அமைந்துவிடுகிறது. நாம் வணங்கும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் வெவ்வேறு அர்த்தங்கள் உணடு. இவை நம் மனதுகளில் நிலைத்து நிற்பதுமுண்டு.

# நியாயமான வாதங்களும்

இந்து மத வழிபாட்டில் மற்றுமொரு சிறப்பம்சம் தெய்வங்களின் உறவு முறைகளாகும். தாய் தந்தை, அண்ணன் தம்பி, உறவு தந்தை மகன் உறவு என்று பலவுண்டு. இந்த உறவு முறை சகோதர பாசத்தை பந்தபாசத்தை பக்தியை மரியாதையை உறவு பற்றுதலை நெருக்கங்களைத் தோற்றுவிக்கின்றன. எமது வாழ்வில் தொடரும் உறவுகளுக்கு அர்த்தங்களையும் உணர்ததுகின்றன.

இந்து மதச்சடங்குகளிலும் தெய்வ வழிபாடுகளிலும் விதிமுறைகளைக் கடைப்பிடித்து வருகின்றோம். கால நேரங்களையும் நாள் நட்சத்திரங்களையும வகுத்தும் கணித்தும்





எஸ்.என்.உதயநாயகம்

*துணை முகாமையாளர்,*

*இந்தியன் வங்கி*

வாழ்வை நடத்துகின்றோம். இதில் அர்த்தத்தையும் புரிந்து கொள்கிறோம்.

நாம் பின்பற்றும் விரதங்களுக்கும் நோன்புகளுக்கும் அர்த்தங்கள் உண்டு. இன்றைய மருத்துவ உலகில் விளக்கமும் உண்டு. அன்று உடல்களில் வேல் பாய்ச்சி முள் தரித்து செய்த நேர்த்திக் கடன்களை இன்று சீன மருத்துவ முறையான அக்குபெஞ்சர் நினைவு படுத்துகின்றன.

இந்து மதத்திலுள்ள ஒவ்வொரு செயலிலும் அர்த்தங்கள் உள்ளன.



# முகூர்த்த நாள்!



"வணக்கம் ஐயா".என்று கூறிக்கொண்டே ஆபிஸ் அறைக்குள் நுழைந்தார் வயதானவா். "வணக்கம;" என்று பதிலுக்குக் கூறிக் கதிரையில் உட்காரச் சொன்னேன. வந்த வயோதிபரின் முகத்தில் ஆவலும், குழப்பமும் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

"வந்த விடயம் என்ன?" என்று கேட்டேன்.

"ஜோதிடாரிடம் எதற்காக வரவேண்டும;",என்றார். வயதானவர் புன்சிரிப்புடன் நரைத்த தாடியைத் தடவியவாறே " கனடாவில் வசிக்கும் எனது இளைய மகளின் திருமணத்துக்கு நீங்கள் தான் திருமண நாள், முகூர்த்த நேரத்தையும் குறித்துக் கொடுக்க வேண்டும்." எனக் கூறினார்.

"ஜாதகப் பொருத்தம் பார்த்தாயிட்டா?," என்று பதிலுக்குக் கேட்டேன்.

"ஜாதகப் பொருத்தம் பார்க்க வேண்டியதில்லை. எனது மகள் தன்னுடன் கனடாவில் படித்த ஒருவரை விரும்புவதால் திருமணம் செய்து கொடுக்கலாம் என்று முடிவெடுத்தோம் "என்றார் தன் வழுக்கைத் தலையைத் தடவியவாறே.

"அப்படியா, நல்லது, மகளின் நட்சத்திரம் என்ன? "என்றேன். " மகம் " என்றார். "மருமகன் நட்சத்திரம்?" "பூரம்"என்றார். மனப்பாடம் செய்தவர் போல. நட்சத்திரங்களைக் கூறிய விதத்தில் வயோதிபருக்கு ஜோதிட அறிவுண்டு என்று ஊகித்துக் கொண்டேன்.

"காதலித்தால்கூட நட்சத்திரப் பொருத்தம் சாியாகவே அமைந்திருக்கின்றது"என்று கூறியவாறே, "அடுத்த மாதம் வைகாசியில் ஒரு நாள்வைத்துக் கொடுக்கட்டா?,"என்றேன்."வைகாசி நல்ல மாதம் தான், இருந்தாலும்," என்று இழுத்தார் வயதானவர் இருமிக் கொண்டே. "வைகாசியில் இரண்டு அமாவாசைகள் வருகின்றன.அதைப்பற்றி யோசிக்கிறீர்களா?" என்றேன்." ஆமா தம்பி, ஆனி மாதத்தில் ஒரு நாள் வைத்துக் கொடுங்கள;" என்றார்

பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்து விட்டு, " ஆனி மாதம் 30ம் திகதி புதன்கிழமை நல்ல நாள்", என்றேன். வயதானவர் தன் கையிலிருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டே," ஆனி 30ம் திகதி நல்ல நாளாக இருந்தாலும், தேய் பிறையாக இருக்கிறதே என்றார் உதட்டைச் சுருக்கிக் கொண்டே.

"அப்படியானால் யூன் மாதம்17ம் திகதி எப்படி " என்றேன். " கூட்டெண் திகதி எட்டாக வருகிறது.என் மகளுக்குப் பிடிக்கவே பிடிக்காது "என்று கூறியவாறே சிரித்தார். சில நிமிடங்களுக்குப் பின்பு, யூன் 16ம் திகதி சரிவருமா? என்றேன்.


வயோதிபா் தனது கையிலிருந்த பஞ்சாங்கத்தைப் பார்த்துவிட்டு " யூன் 16 ஞாயிற்றுக் கிழமையாக இருப்பதால் திருமணத்துக்கு எல்லோரும் வருவார்கள், ஆனால்..." என்று இழுத்தார் பெரியவர்." கூறுங்கள் " என்றேன்.

"ஞாயிற்றுக் கிழமையும், ஆயிலிய நட்சத்திரமும் சேர்ந்து வருவதால் மரண யோகம்.அன்று யோகம் நல்லதாக இல்லையே என்றார்." அப்படியா!ஆவணி மாதம் 18ம் திகதி ரேவதி நட்சத்திரம்,யோகம் நல்லதாக இருக்கின்றது, சரி வருமா? "என்றேன்.

" யோகம் சரிவந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சந்திர அஷ்டம தினம்,வேறு நாள் பாருங்கள்" என்றார் வயதானவர் நெற்றி வியர்வையைத் துடைத்தவாறே.

" கார்த்திகை மாதத்தில் நாள் வைக்கலாமே எப்படி? "என்றேன்"கார்த்திகையும் ஒத்துவராது தம்பி, அது பெண்ணுடைய பிறந்த மாதம்." என்றார்.

"இவ்வளவு ஜோதிட விடயங்கள் தெரிந்த நீங்கள்,ஒருநாள் வைக்க என்னிடம் வரவேண்டிய



விக்னேஷ்

அவசியம் என்ன? "என்றேன் சற்றுக் கடுமையான குரலில்" ஏற்கனவே பலரிடம் சென்று பார்த்து முடிவெடுக்க முடியாமல் தான் ஜோசியரே உங்களிடம் வந்தேன்" என்றார் பணிவுடன்.

இறுதியாக ஒரு மணி நேரத்தின் பின்பு தை மாதம் 2000ஆம் ஆண்டில் நல்ல ஒருநாள் வயோதிபருக்கு திருப்திகரமாக அமைந்ததால் நன்றியுடன் சென்றார். கரிநாள், படுபட்சி,சுபஓரை,கத்தரி,குரு-வெள்ளி அஸ்தமனம் என்று கூறியென்னை மேலும் குழப்பாமல் வயோதிபர் சென்றதே எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தோஷங்கள் அற்ற நாளே கிடையாது. குறைந்தளவு தோஷமுடைய நாளாகத் தெரிவு செய்து முகூர்த்தம் வைப்பதும், சுப காரியத்தைத் தொடங்குவதும் சாலச்சிறந்தது. அனுபவம் உள்ள ஜோதிடரின் உதவியுடன் முகூர்த்த நாளைத் தெரிவு செய்வதே நன்மையானது.

திருமணத்துக்கு நாள் வைக்கும்போது முக்கியமாக வளர்பிறையில், அஷ்டமி, நவமி, அமாவாசைத் திதிகள் வராத நாட்களில், இருவருக்கும் பொருத்தமான மாதத்தில், செவ்வாய், சனி ஆகிய கிழமைகளைத் தவிர்த்து, அமிர்த, சித்த யோக நாட்களில், பகல் வேளையில், முகூர்த்த நேரத்தில் உதயமாகும் இலக்கினத்தின் அதிபதி அஸ்தமனம் அடையாமலும் பாவ கிரக சேர்க்கை அடையாது இருக்கும் நேர வேளையில், 7ம், 8ம் இடம் சுத்தமாக இருக்க நேரம் குறிப்பின், அந்த நேரம் சுப நேரமாக, திருமணம் எவ்வித தடையின்றி நிறைவேறக் கூடியதாக அமையும்.


"சந்நிதி" வாசகர்களுக்கு

எமது இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்

அருள் ஜுவலர்ஸ்



**WITH BEST WISHES**
**from**

**ARUL JEWELLERS**

**3, SEA STREET**
**colombo - 11**

**TELEPHONE NO: 436331**

# கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்



இறைபணிச் செம்மல்
க.பாலசுப்பிரமணியம்

பழமையும் புதுமையும் பொலிவுற்றுத் திகழும் கொம்பெனித் தெரு அருள் மிகு சிவசுப்பிரமணியப் பெருமானது ஆலயம் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். புறக்கோட்டை டாம் வீதியில் திரு- பெரியதம்பி என்னும் சைவப்பெரியாரின் காணியின் மத்தியில் சிறிய அளவிலான மூர்த்தி ஒன்று அக்காலத்தில் வணக்கம் செலுத்தப்பட்டு வந்தது. இலங்கையில் பல்வேறு பாகங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தலைநகருக்கு வரும் இந்துக்கள் அனைவரும் வணங்கும் ஒரு யாத்திரீக ஸ்தலமாக இக்கோயில் விளங்கியது.

1832ம் ஆண்டளவில் ஸ்ரீவள்ளி தேவசேன சமேத சுப்பிரமணியப் பெருமானின் திருவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீறணஜி மகாராஜி என்ற பெரியார் பூசகராகவும் ஸ்ரீமாணிக்க பண்டாரம் உதவியாளராகவும் இவ்வாலயத்தில் பணிபுரிந்தனர். அக்காலக் கட்டத்தில் போயர் யுத்த முனைக்குச் சென்ற இந்திய படைவீரர்களும் தளபதிகளும் இவ் ஆலயத்தை வணங்கி இந்தியா சென்றார்களாம்.

நாளடைவில் பக்தர் கூட்டம் அதிகரித்தமையினால் டாம் வீதியில் இருந்த இவ்வாலயம் வேறோர் இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்றைய ஆட்சியாளருக்கும் இந்த இடம் தேவைப்பட்டதன் காரணமாக பெரியார் சேர் பொன்னம்பலம் அவர்களிடம் அரசாங்கம் பொருத்தமான இடத்தில் இவ்வாலயத்தினை அமைக்கும்படி பணித்தது. 1887ம் ஆண்டில் திரு அருணாசலம் முதலியார் அவர்கள் இவ்ஆலயத்தினை கொம்பெனித்தெரு கியூ றோட்டிலுள்ள வளவினுள் கட்டுவித்தார்கள்.

1902ம் ஆண்டில் இவ்வாலயம் சைவப் பெருந்தகை சேர் பொன்னம்பலம் இராமநாதனால் பெருப்பிக்கப்பட்டு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் ஆலயம் என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. அத்துடன் இவ்வாலய நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. ஸ்ரீஇராமநாதன் அவர்களுக்கு பின்னர் அவருடைய புத்திரர் திரு.இ.இராஜேந்திரா அவாகள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று பணியாற்றினார். 1942ம் ஆண்டில் அத்தியார் திரு.அருணாசலம் அவர்கள் தலைமையில் ஒரு குழு ஆலயத்தை நிர்வாகித்து வந்தது. இதன் பின்னர் இவ்வாலய நிர்வாகப் பொறுப்பனைத்தும் ஓர் அறங்காவலர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவ்அறங்காவலர் சபையின் தலைவராக சைவப்பெரியார் திரு எம். எஸ் திருவிளங்கம் விளங்கினார்கள்.

இக்கால எல்லையுள் எதுவித திருத்தங்களுமின்றி பழுதடைந்திருந்த இவ் ஆலயத்தை புனர் நிர்மானம் செய்யும் பொறுப்பை சைவப் பெரியாரும் வர்த்தகருமான திரு எ.கனகசபை அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு தர்மகர்த்தா சபை 1970ம் ஆண்டளவில் பொறுப்பேற்றது. இத் தர்மகர்த்தா சபையின் செயலாளராக கடமையாற்றிய திரு.க.தியாகராஜா அவர்களின் பெரு முயற்சியால் காஞ்சி காமகோடி பீடம் ந்திரசேகநேந்திர சரஸ்வதி அவர்களுடைய நல்லாசியுடனும் திருப்பனந்தாள் மடம் காசிவாசி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமி அவர்களின் ஆலோசனைப்படியும் மற்றுமுள்ள பெரியோர்களினது ஒத்துழைப்புடனும்

பிரதிஷ்டா பூஷணம் சிவ ஸ்ரீ நயினை ஐ.கைலாசநாதக் குருக்கள் அவர்களால் 1975ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி புனராவர்த்தன அனாவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடத்தி வைக்கப்பட்டது. 1980ம் ஆண்டு அரசினர் இவ் ஆலயப் பொறுப்பை ஏற்று சைவப் பெரியாரும் - சிரேஷ்ட இறைவரி மதிப்பாளருமான திரு.வே.சண்முகம் அவர்களை இவ்வாலய அரச நம்பிக்கை பொறுப்பாளராக நியமனம் செய்தது. 1984ம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அளித்த உத்தரவை ஏற்று இளைப்பாறிய உயர் நீதிமன்ற அரசர் திரு.ப.சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஆலய சட்ட திட்டங்களுக்கமைய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் திகதி நடைபெற்ற விஷேட கூட்டத்தில் தங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பாத்திரமான அறங்காவலர் சபையினர் இவ் ஆலயத்தைப் பொறுப்பேற்று இப்புனித பணியில் தொடர்ந்து செயற்பட ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். 1988ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இச்சபை செயற்பட்டது. தர்மகர்த்தா சபையின் காலத்தில் பல்லோராலும் பாராட்டத்தக்க பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு ஆலய நித்திய பூசைகள் மற்றும் யாவும் எல்லோராலும் மெச்சத்தக்க விதத்தில் நடைபெறுகிறது. சிறப்பாக வானளாவிய 82 அடி உயரம் கொண்ட அழகுறு இராஜகோபுரமும் 51 அடி உயரம் கொண்ட இருமருங்கு மணிக் கோபுரங்களும் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமையப் பெற்றது. முருகப் பெருமானின் திருவருளாலும் தர்மகர்த்தா சபையினரதும் இராஜ கோபுர திருச் சபையினரதும் பெரும் உழைப்பாலும் பெருமக்களின் பேராதரவுடனுமே இப்பணி சிறந்தோங்கியது.

இராஜகோபுர திருப்பணிச்சபைத் தலைவராக திரு.சி.தனபாலா அவர்களும் செயலாளராக அடியேனும் திரு. தம்பி நவரட்ணம், ஆகியோர் பொருளாளராகவும் மற்றும் தர்மகர்த்தா சபையினரும்- இராஜகோபுர திருப்பணிச்சபை உறுப்பினர்களும் பொதுமக்களும் அயராது பணியாற்றினர். 1998 ஜனவரி நடுப்பகுதியிலிருந்து இன்றுவரை ஆலய அரச நம்பிக்கைப் பொறுப்பாளர் திரு.க.கனகசபாபதி அவர்களால் இவ்ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. இவருக்கு உதவி புரிவதற்காக திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு.ந.இராமசாமி அவர்களும் நீதிமன்றத்தினால் நியமனம் செய்யப் பட்டுள்ளார்கள்.

தேர்த்திருப்பணி

இவ் ஆலயத்திற்கு நீண்ட நாள் குறையாக இருந்த "தேர்" ஒன்று செய்வதற்கு திருவாளர் திருக்குமார் நடேசன் அவர்களை தலைவராகக் கொண்ட ஓர் தேர்த் திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டது. இத்தேர் திருப்பணி நிதிக்கு பொறுப்பாக ஆலய அரச நம்பிக்கைப் பொறுப்பாளரும்-செயலாளராக அடியேனும் நியமிக்கப்பட்டோம். முருகன் திருவருளினாலும் பெருமக்கள் ஊக்கத்தினாலும் ஒருவருட கால எல்லையுள் ஓர் அழகிய தங்கத்தேர் பல இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு 1998ம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டு 20.08.98ல் தேர்த்திருவிழா வெகு கோலாகலமாக நடந்தேறியது. 1993ம் ஆண்டு முதல் கொடித்தம்பம் வைக்கப்பட்டு 10 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகிறது. யாழ் நல்லூர் கந்தன் ஆலய தேர்த் திருவிழா அன்றே இங்கும் தேர்த்திருவிழா நடைபெற்று வருவது ஓர் வரப் பிரசாதமாகும். இவ்வாலய சுற்றுப் பிரகார கோயில்கள் உருவாவதற்கு பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய பெரியார்களுள் தற்போது லண்டன் மாநகரில் வசிக்கும் சைவப் பெருந்தகை பொறி இயலாளர் திரு.ஆறுமுகம் அவர்களும் ஒருவராவர்.

# ஜாதகக் கதைகள்

கதை உண்மை பெயர்கள் கற்பனை

திருமதி சிங்கார வேலுவிற்கு இப்போது 40 வயது. இவர் என்னிடம் தன் எதிர் காலம் பற்றிக் கேட்க வந்த போது 33 வயது இருக்கும் இரண்டு குழந்தைகள். கணவர் ஐரோப்பிய நாடு ஒன்றில் இருக்கிறார். ஆனால் அவர் இவர்களைக் கூப்பிட எதுவித முயற்சியும் எடுக்கவில்லை. இவர்களை எப்படியாவது குடும்பத்தில் ஒன்று சேர வைத்துவிட வேண்டுமென்று இவரது தாயார் எவ்வளவோ பாடுபட்டார். இவரது கணவர் இவர்கள் மேல் எதுவித அக்கறையும் கொள்ளாதது மிகுந்த கவலையளித்தது. தகப்பன் யாழ்ப்பாணத்தில; தாய் மகளுடனும் பிள்ளைகளுடனும் கொழும்பில் சீவிப்பது என்றால் எவ்வளவு கஷ்டம் என்று எண்ணிப்பாருங்கள்.

வீட்டு வாடகை மாதம் பத்தாயிரம் இதர செலவுகள் என்று மாதம் ரூபாய் பதினாறாயிரம் பதினெட்டாயிரம் தேவை. பாவம் என்ன செய்வது வெளிநாட்டிலுள்ள சகோதரர்கள் தான் செலவிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒரு ஏஜன்சியைப் பிடித்து தானாகவே கணவனிடம் போய்ச் சேரலாமா என்று புறப்பட்டார். ஆறுமாதம் இடையில் வேறுநாடு ஒன்றில் தங்க வைக்கப்பட்டார் என்று கேள்வி பின்னர் இன்று வரை நான் அவர்களது தாயாரையோ உறவினர்களையோ சந்திக்க முடியவில்லை. எனவே சரியான முடிவு தெரியவில்லை அவரது ஜாதகம் இதுதான்

துலாம் லக்னம்;'லக்னத்தில் சந்திரன் 3ல் கேது 5ல் சனி ' 7ல்வியாழன் 8ல்புதன் 9ல்சூரியன் புதன் சுக்கிரன் ராகு நட்சத்திரம் விசாகம் 02ம்பாதம் துலாராசி

ஒரு ஜாதகருடைய குடும்ப வாழ்க்கை பற்றி ஆராய வேண்டுமாகில், கணவன், மனைவி இருவருடைய கிரக அமைப்புகளையும் ஆராய்வதே சரியானதாகும். ஒருவருடைய வாழ்க்கைப் பிரச்சனைக்குரிய கிரக அமைப்புக் காணப்பட்டால், மற்றவருடைய ஜாதகத்தில் வாழ்க்கை நன்கு அமையக் கூடிய கிரக அமைப்புக் காணப்பட்டால், இருவரும் சுமுகமாக வாழமுடியும்

இந்த ஜாதகியைப் பொறுத்தமட்டில் இவரது கணவரது ஜாதகம் எனக்குக் கிடைக்கவில்லை அனேகமாக அவரது ஜாதகத்திலும் பிரச்சனைகள் இருப்பதால் தான் இப்படி நடந்திருக்கிறது என்று ஊகிக்கின்றேன்.

இவரது ஜாதகத்தில் வாழ்க்கைப்

**ஆயர்பாடி ராமகிருஷ்ணன்**
**ஜோதிட ஆய்வாளரும், பலாபலன் வெளியீட்டாளரும்**

பிரச்சனை பற்றி சற்று கவனிப்போம். 7ம்இடம் கணவனை அல்லது மனைவியைக் குறிக்கும். இங்கே 7ம் அதிபதி செவ்வாய் 8ல் மறைந்து போய் இருப்பதால், கணவனை இவருடன் சேரவிடாமல் செய்கிறது. பகை விரோதங்களுக்குரிய 6ம்அதிபன் அது வியாழனாக இருந்தால் கூட 7ல் இருப்பதால், கணவன் முரட்டுப் பிடிவாதமாக வெறுப்புடன் இவர்களுடன் கதைக்காமல் கூட இருக்கிறார். குடும்பஸ்தான 2ம் அதிபனும் செவ்வாய்ராசி 8ல் மறைந்து போய் இருப்பதால், குடும்ப வாழ்க்கை இல்லாமல் போலிருக்கிறது. புத்திர ஸ்தானத்தில் சனி இருக்க, புத்திரகாரகன் வியாழன் 3ம் 6ம் அதிபனாகி 7ல் இருந்து லக்கனத்தைப் பார்ப்பதனால் புத்திரர்களது சுமை ஜாதகியினது தலையில் சுமத்தப்பட்டுள்ளது. வியாழனைச் சனி பார்ப்பதால் குருதோஷ மேற்படுவதால், குருவாகிய கணவன் மனிதாபிமானமாக நடக்கவில்லை. ஆனால் வியாழனுக்கு 7ல் சந்திரன் இருப்பதால் கேசரி யோகம் ஏற்பட்டிருப்பதால், ஜாதகி வாழ்க்கைக் கடலில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவார் என்று கூறியிருக்கிறேன்.

எனவே நீங்களும் பொருத்தம் பார்க்கும் போது வெறுமனே நட்சத்திரப் பொருத்தம் மட்டும்

பாராமல், கிரக அமைப்பு வாழ்க்கைக்கு ஏற்றதாக, பொருத்தமாக இருக்கிறதா என்று சோதிடரைக் கேளுங்கள். நீங்கள் நிச்சயமாக எதிர் கால பலன்களை சரியாக சொல்லக் கூடிய ஒரு ஜோதிடரிடம் சென்றால் மட்டுமே இப்படி கிரக பொருத்தத்தைச் சரியானதாக பார்க்க முடியும். பஞ்சாங்கத்தை மட்டும் படித்தவர்களால் பார்க்கப்படும் நட்சத்திரப் பொருத்தங்கள் உங்களை நட்டாற்றில் விட்டு விடக் கூடும்.

ஜாதகியின் கிரகநிலை இதுதான்

| | | | |
|---|---|---|---|
| 6 | வியாழன் | செவ்வாய் | சூரியன் புதன் சுக்கிரன் ராகு |
| சனி | இராசி | | 10 |
| 4 | | | 11 |
| கேது | 2 | லக் சந்திரன் | 12 |

* * * * *

ஈசுவரனது அருளைக் கிருபையைப் பெற எந்த விதத்திலும் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு அவன் அருள் எப்படிக் கிடைக்கும்?

உனக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர் குற்றம் காணாதே. மாறாக உனது குறைகளையே பார். உலகம் முழுவதுமே உனக்கு அந்நியரல்ல. உலகம் உனதே.

- அன்னை சாரதாதேவி -

# கந்தப் பெருமானே வில்லூன்றி வாராய்



சைவப் புலவர்
இ.வடிவேல்

திருகோண மாமலையின் ஒருகோணத்தே
சிறந்தோங்கு கந்தகிரிச் சாரல் தன்னில்
அருளாளர் வாழ்கின்ற வில்லூன் றிக்கே
ஆறுமுக வேலவனே அமர வாராய்!

சூரனொடு சிங்கமுகன் பதுமன் தன்னைச்
சுடர்கின்ற வேலெறிந்து அழித்தா யுந்தன்
வீரவருள் காட்டிநல் வில்லூன் றிக்கே
வேண்டுவார் வேண்டுவதை ஈய வாராய்

அருணகிரி நாதர்முத லான வன்பர்க்கு
அருள்சுரந்து அருணை மலைமீது வந்தாய்
அடியார்கள் வாழ்கின்ற வில்லூன்றி
அமர்ந்தினிதே அருள்செய்ய விரைந்துவாராய்!


வேலேந்து கையோனே வினைகள்தீர்க்கும்
வித்தகனே விண்ணவர்கள் போற்றுந்தேவே
பாலேந்திப் பழமேந்தி அடியார் சூழ்ந்து
பணிந்திடவே வில்லூன்றித் தலத்தே வாராய்!

மாங்கனிக்காய் மாயப்ர பஞ்ச மெல்லாம்
மயிலேறி விளையாடி வந்த வேலா
தேங்கதலிச் சோலை நிறை வில்லூன்றிக்கே
திருவடிவைத் தமர்ந்தருள விரைந்துவாராய்

சொல்லாறு செந்தமிழின் சுவையே சோலை
மலையோடு பரங்குன்றம் அலைவாய் விட்டு
வில்லூன்றித் தலமதனில் வந்த கந்தா
வினையாவுந் தீர்த் தெம்மைக் காக்க வாராய்

குன்றுதோ றாடிவரு குமரா கோலக்
குறமாது வள்ளிமண வாளா தெய்வ
குஞ்சரி மனத்திலுறை குகனே வேலா
குறைதீர அருள்தந்து காக்க வாராய்

# பூரண குருக்கள்



ஈழத் திருநாடு ஈன்ற சிவாச்சாரியர்களுள் தலை சிறந்த பேரறிஞராய்த் திகழ்ந்த ஒரு சிலருள் தனிப் பெருமை வாய்ந்தவரான பிரம்மஸ்ரீ இ.கு.பூரணானந்தேஸ்வரக் குருக்கள் அவர்கள் ஆரிய திராவிட பாஷா விற்பன்னராய் இவ்விரு மொழிகளிலும், இலக்கிய, இலக்கணங்களில் துறை தேர்ந்தவராய் விளங்கினார். இவர் பேச்சு வன்மையும், கட்டுரை புனைவதில் தேர்ச்சியும் உள்ளவர். சமயக் கிரியைகளை முறைப்படி செய்வதில் ஈடு இணையற்று விளங்கியதை மக்கள் யாவரும் அறிவர்.

வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் புதிதாக நவக்கிரக ஆலயம் அமைக்கவும், நவராத்திரி காலத்தில் விசேட உற்சவம் நிகழ வேண்டும் என்ற தீர்க்க தரிசனத்துடன் புதிதாக இராஜ இராஜேஸ்வரி அம்மனை (இந்தியாவிலிருந்து வந்து தம்பலகாமம் கோணேசர் ஆலயத் திருப்பணி செய்து கொண்டிருந்த ஸ்ரீ வைத்தியநாத ஸ்தபதியார் மூலம்) வார்ப்பிக்கவும் ஏற்பாடுகளைச் செய்தவர். உள்வீதியில் தெற்கு மண்டபம், மேற்கு மண்டபம் அமைய ஆலோசனை கூறி வழிகாட்டி அதனை நிறைவேறச் செய்தவர். ஆலயக் கிரியை முறைகளை முறையாக வகுத்து உருவாக்கியதுடன் இலங்கையில் பல குருமாருக்கும் பயன் தரும் வண்ணம் பல மூர்த்திகளின் உற்சவம், பிரதிஷ்டை ஆகியவற்றிற்குரிய பல பத்ததிகளை தன்கையாலேயே எழுதி விநியோகித்துள்ளார். அப்பத்ததிகளை இன்றும் பல ஆலயங்களில் பிரபலம் வாய்ந்த குருமார் உபயோகப்படுத்துகிறார்கள். இந்தியாவில் திருக்கோயிலூரில் நிகழ்ந்த அர்ச்சகர் சங்க மகாநாட்டில் தலைமை தாங்கி உரையாற்றி நம நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தவர்.

பூரண.சுந்தரேஸ்வர ஐயர்
(இசை ஆசிரியர்)

வில்லூன்றிக் கந்தன் ஆலயத்தில் கந்த புராணம், கந்தசஷ்டி காலத்தில் மயூரகிரிப் புராணம் ஆகியவற்றிற்கு தானே சிறந்த பாணியில் பயன் கூறி விளக்கியமை அனைவரும் அறிந்ததே. பயன் கூறும் முறையை பலருக்குப் பயிற்றுவித்து அதன் பலனை யாவரும் பெறும் பொருட்டு பணியாற்றி உள்ளார். பூரணக் குருக்கள் என்ற பெயரிற்கேற்ப பல துறைகளிலும் பூரணத்துவம் பெற்ற இவர் எல்லோருடைய மனதிலும் நீங்காத இடம் பெற்றுள்ளார். அமரரான அவரின் ஆசி இச் சுப தினத்திலே பக்தர்கள் யாவருக்கும் உரித்தாகுக.

# வாழ்த்துச் செய்தி

சிவ ஸ்ரீ இராமநாத விஜயகுமாரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்
கொம்பனித்தெரு
அருள் மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
கொழும்பு

நமது நாட்டில் சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கும் முருகன் ஆலயங்களில் தற்போது வருடாந்த மகோற்சவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனையொட்டி "சந்நிதி" என்னும் சமய சஞ்சிகை இம்மாத இதழை முருகன் சிறப்பு மலராக வெளியிட முன்வந்திருப்பது பாராட்ட வேண்டியதே.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் வருடாந்த மகோற்சவம் 29.08.99 அன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்வரும் 08.9.99 திகதியன்று இரதோற்சவமும் அடுத்த நாள் 9.9.99 அன்று தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன். கலியுகத்தில் அவனே கண்கண்ட தெய்வம். எனவே அப்பெருமானது பாதம் பணிந்து நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ பிரார்த்திப்பதோடு "சந்நிதி" சஞ்சிகையையும் வாழ்த்தி அமைகின்றேன்.



திருக்கோணமலை கலைமகள் பாலர் பாடசாலை ஆண்டு விழாவில் பாலர்கள் தோன்றி நடிக்கும் அருமையான காட்சி.

# கிறிஸ்தவமும் மனிதநேயமும்



"ஒருவன் தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எவனிடமுமில்லை" இறைமகன் இயேசுவின் அர்த்தமுள்ள வார்த்தைகள் இவை (யோவான் 15:13)

ஆனால் செயல் ரீதியாக இறைமகன் இயேசுவோ இதைவிட ஒருபடி உயர்ந்து நண்பர்களுக்காக மட்டுமல்ல தன்னை எதிர்த்தவர்களுக்காக, தன்மேல் காறி உமிழ்ந்தவர்களுக்காக, மொத்தத்தில் பாவத்தில் உழலும் பாவிகள் நமக்காக உயிரையே கொடுத்தார். இதன் வழி மனித நேயத்திற்கு புது வரைவிலக்கணம் சமைத்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு அரசன் தன் செல்வங்களையெல்லாம் நாட்டு மக்களுக்குக் காண்பித்து விட்டு அவர்களை நோக்கி, நீங்கள் காண்பவற்றுள் விரும்பிய ஏதாவதொன்றை மாத்திரம் தொடலாம். அது உங்களுக்கே சொந்தமாகும் என்று கூற அனைவரும் ஒவ்வொன்றைத் தொட்டனராம்.

ஆனால் அரசனின் பணிப்பெண்ணோ எதையும் தொடாததைக் கண்ட அரசன், உனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையா? என்று கேட்க, அப்பெண்ணும் அரசனைத் தொட்டாளாம். அம்மாது எல்லோரையும் விட மிகவும் புத்திசாலி புரியவில்லையா? அரசனுக்குத்தான் அனைத்துப் பொருட்களும் சொந்தம். எனவே அரசனைத் தொட்டால் அனைத்தும் அம்மாதுக்கும் சொந்தமல்லவா?

ஏன் நாமும் அம்மாதுவைப் போல் இருக்கக் கூடாது. இறைமகன் இயேசுவின் கரம் பற்றிக் கொண்டால் மனித நேயத்தைக் கடைப்பிடிக்க அதன் உள்ளார்ந்த உணர்வு முத்துக்களை எமது உள்ளமாகிய ஆரத்தில் பதித்துக் கொள்ள சிறந்த வழி வேறு ஏதும் உண்டோ?

மனித நேயத்தைக் கடைப்பிடிக்க வழிசமைக்கும் அணிகலன்களான அன்பு, சந்தோஷம், சமாதானம், தயவு, நீடிய பொறுமை, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், (கலாத்தியர் 5:22-26) ஆகிய ஆவியின் கனிகளால் எம்மை அலங்கரித்து நம்மை எதிர் நோக்கும் தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி விண்ணரசின் வாரிசுகளாவோம். ஏனெனின் இறைமகன் இயேசுவும் எம்மோடு வருவது அதிக நிச்சயமல்லவா? ஒரு நாள் ஒரு சகோதரன்

எஸ்.எவ்.கமலநாததீபன்
ஆசிரியை
வின்சன்மகளிர் உயர்தர தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு

தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தாராம். பல இடங்களில் நான்கு அடிகள் காணப்பட்டன. சில இடங்களிலோ ஈரடிகள் மாத்திரமே தென்பட்டன. மிகுதி ஈரடிகளும் எங்கே மறைந்தன? சிந்திக்கத் தூண்டியது. ஒரு கணம் யோசித்தார். ஒருவேளை அந்த சில இடங்களில் இறைவன் என்னை விட்டுச் சென்று விட்டாரோ? அவரது சிந்தனைக்கான பதில் இறைவனிடமிருந்தே வந்தது.

"மகனே! கரடு முரடான, முள்ளுள்ள இடங்களில் உன்னால் கடக்க முடியாத பாலைதயைக் கடக்க உன்னைச் சுமந்து சென்றேன்." ஓ! அதனாலன்றோ எனது அடிகள் அங்கு காணப்படவில்லை. மானிடரில் இறைமகன் இயேசு கொண்ட நேயத்தின் மகத்துவம் தான் என்னே! இவ்வேளையில் அப்பாடலை என்னால் மீட்காமல் இருக்க முடியவில்லை.

கடந்து வந்த பாதையெல்லாம் - எம்மை
சுமந்து வந்த உம்மன்பல்லவா?

என்று பாடுகிறான் ஒரு கவிஞன். ஏனெனில் இயேசுவின் அன்பை ருசித்த ஒரு கவிஞனல்லவா அவன். மனித நேயத்தின் அடுத்த பக்கத்தைப் புரட்டுவோமாயின் அதன் அச்சாணியான பகிர்தல் எம் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளதை நாம் உணரலாம். நம்மிடையே உள்ள உடைமைகள், தாலந்துகள், இனிய துன்பங்கள் அனைத்தும் பகிரப்படுமிடத்தே தான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக்கப்படுவதுடன் நிறைவும் பெறுகின்றது. எமது அனுபவமும் இதைப் பறைசாற்றும்.

இறைமகன் இயேசு வழிநின்ற ஆதிக் கிறிஸ்தவர்கள் அத்தனை பேரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர் என்று வேதம் கூறுகின்றது. அவர்களுள் ஒருவனும் தன் உடைமை எதன் மீதும் உரிமை பாராட்டவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. இதனால் வறுமைப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவனும் இருந்ததில்லை என, பரிசுத்த லூக்கா அப்போஸ்தலர் பணியில் அழகாகக் கூறிச் செல்கின்றார். மனித நேயத்திற்கு பகிர்தலின் முக்கியத்துவம் இதனால் உணரப்படுகின்றதல்லவா?

எமது உடைமைகளை இல்லாதவனோடு பகிர்ந்து கொள்வதும் நோயாளிகள், வலது குறைந்தோர், விதவைகள், கைதிகள், அநாதைகள், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோரோடு எமது அன்பையும் ஆதரவையும் நாம் பகிர்ந்து கொள்வது இன்றியமையாததல்லவா? கைமாறு கருதிய அன்பினால் எமக்குக் கிடைக்கும் இலாபமென்ன? புகழும், பரிசுப் பொருட்களும், பதவிகளுமேயாகும். அவ்வாறெனில் இவ்வுலகத்திலேயே நாம் செய்தவற்றுக்கு கைமாறு பெற்று விட்டோம். விண்ணுலகை அடைய, அங்கே எமது சொத்துக்களைச் சேர்த்து வைக்க கைமாறு கருதாத அன்பையும், பகிர்தலையும் உள்ளன்போடு செய்ய முன்வருவோம். இறை மகன் இயேசு தன் உயிரையே கொடுத்து தன் தசையையும், இரத்தத்தையும் எம்மோடு பகிர்ந்து கொண்டாரே. இதை விட மேலான அன்பு வேறேதும் உண்டோ?

சிலுவையில் ஆவிசோரும் வேளையிற் கூட மொழிந்தாரே ஒரு வாக்கியம். அந்த ஒரே வாக்கியம். உலகம் இன்றும் கண்ணீர் வடிக்கின்ற வாக்கியம். "பிதாவே இவர்களை மன்னியும்" அதுவும் தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்காக. அத்தோடு அவர் மனம் நிறைவு பெறவில்லைப் போலும். பிதா அவர்களை மன்னிக்க மாட்டாரோ என்ற ஏக்கமும் கலக்கமும் அந்த ஆவி சோரும் வேளையிலும் அவரை ஆட்கொண்டது போலும். அதனால்தான் என்னவோ "அவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்;" என்று பிதாவிடம் அவர்களது குற்றத்தை மறைக்க நியாயமும் தேடுகின்றார் போலும். என்னே! அவரது மனித நேயம் சிலுவையில் பிதாவிடம் இவ்வாறு கூறிய பின்பு தான் திருப்தி அடைந்தார் போலும் தன் ஆவியை பிதாவிடம் ஒப்புக்கொடுக்கின்றார்.

மகனே, மகளே உன்னைத் தன்னைப் போலாக்க தன்னோடு இணைத்துக் கொள்ள தன் உயிரைக் கொடுத்து தன் தசையையும் இரத்தத்தையும் உன்னோடு பகிர்ந்து கொண்டாரே. அவருக்காக மனந்திரும்ப ஒரு துளி கண்ணீர் உன் உள்ளத்தின் ஆழத்தில் ஊற்றெடுக்காதா? இறைமகன் இயேசு விட்டுச் சென்ற எச்சங்களைச் சுமந்து உன் அயலானை நேசிக்க இன்றே புறப்படு. ஏனெனில் நாளை என்பது உனக்குச் சொந்தமானதல்ல.

"கோதுமை மணி நிலத்தில்
விழுந்துசாகாவிட்டால்
அது பலன் கொடுக்க மாட்டாது"

# குகனே வருக

குகனே வருக ! களங்கம் இலாக்
கோனே வருக ! கறை மிடற்றோன்
மகனே வருக ! மனம் பூத்த
மலரே வருக ! ஓர் ஆறு
முகனே வருக ! சிவானந்த
முதலே வருக ! அடியாரின்
அகனே வருக ! பழநி மலை
அரசே வருக ! வருகவே

– அகத்தியப் பஞ்சகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


'சந்நிதி' முருகன் சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

சு. சொக்கநாதன்
உரிமையாளர்

**நாதன் அன்ட் பிரதர்ஸ்**

இறக்குமதியாளர், பிரபல வர்த்தகர், கமிஷன் ஏஜன்ட்ஸ்

திறம் தேயிலை இங்கு விற்கப்படும்

இல. 197, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு 11
தொலைபேசி : 323819

# குகனுண்டு பயமில்லை !




## மானிடப் பிறவி ஏன் சிறந்தது?

மற்ற ஜீவராசிகளை விட மனிதன் ஏன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான்? பகுத்தறிவு உடமையினாலா? இல்லை அப்படியாயின் மாமிசம் புசியாத யானையும் எஜமானுக்குச் சேவை செய்யும் நாயும் பகுத்தறிவு உடையவை அல்லவோ? மனிதன் பேசுகிறான். அதனால் மேலானவன் என்கிறீர்களோ அன்று அநேக பறவைகள் பேசும் சக்தியுடைய வகைகளாக இருக்கின்றன. அதாவது கிளியைப் போல பல புள்ளினங்கள் பேசுகின்றன. ஆயினும் அவை மனிதனைவிட பல்மடங்கு தாழ்த்தியே கூறப்படுகின்றன. ஆதலால் மனிதனிடம் இருக்கும் ஏதோ ஒரு சிறந்த குணம் மற்றவைகளிடத்தில் காணப்படுவதில்லை. அது பகுத்தறிவும் அன்று. பேசும் திறமையும் அன்று அப்படியாயின் அதுவே ஆத்ம விசாரம் செய்யத் தூண்டும். தெய்வாம்சம் பொருந்திய ஞான சக்தியாகும்.

– இராஜரத்தினம் மகேந்திரராஜா

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்




கொழும்பு.கொம்பனித் தெரு.சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## திருக்கோணமலை



## வில்லூன்றிக் கந்தன்



Rs 30/=

Edited by:V.Varathasuntharam, Published by:Sivagami Ammal Pubilcations,39,36th Lane Wellawatte Srilanka.Tel.:596253.
Printed by :Unie Arts(Pvt)Ltd,No 48B, Bloemendhal Road, Colombo-13.Tel.:330195